க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான

# தமிழ் இலக்கிய வரலாறு



தமிழ் மொழிப்பிரிவு

மாகாணக் கல்வித்திணைக்களம் வடமாகாணம் 2015

# சங்க காலம்
# சங்கமருவிய காலம்

1. சங்ககால இலக்கியங்களை அவற்றின் பொருள் மரபுக்கேற்பவும் செய்யுள் மரபுக்கேற்பவும் வகுத்துக்காட்டுக.
2. சங்ககால புறத்திணை இலக்கியங்களின் தனித்துவப் பண்புகளைச் சுருக்கமாகத் தருக.
3. நெடுநல்வாடையைப் புறத்திணை இலக்கியம் எனக்கொள்வது எவ்வாறு பொருந்தும் என்பதைப் பரிசீலிக்குக.
4. சங்ககால புறத்திணை இலக்கியப் பண்புகள் பிற்கால இலக்கியங்களில் எவ்வாறு வளர்ந்துள்ளன என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
5. புலவர்களிற்கும் மன்னர்களிற்கும் இடையிலான தொடர்பு சங்ககால இலக்கியங்களில் வெளிப்படுமாற்றினை தெளிவுபடுத்துக.
6. சங்ககாலப்புலவர்கள் அக்கால மன்னர்களுக்கு நல்லறிவூட்ட முனைந்தமையை சங்கப்பாடல்களின் துணை கொண்டு விளக்குக.
7. சங்க இலக்கிய வளர்ச்சியில் பின்வரும் நூல்களின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.
    அ. பரிபாடல்
    ஆ. பட்டினப்பாலை
    இ. திருமுருகாற்றுப்படை
8. மன்னர்களைப் புகழ்ந்து பாடும் சங்க இலக்கிய மரபு பிற்கால இலக்கியங்களில் எவ்வாறு வளர்ச்சி பெறுகின்றது.
9. சங்ககால அகத்திணை மரபின் முக்கிய அம்சங்களை விளக்குக.
10. சங்ககாலத்தில் எழுந்த ஆற்றுப்படை இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பண்புகளையும் சங்ககாலத்தில் அது பெற்ற வளர்ச்சியையும் மதிப்பிடுக.

**சங்க கால இலக்கியங்களை அவற்றின் பொருள்மரபிற்கேற்ப வகைப்படுத்துக?**

1. எட்டுத்தொகை
2. பத்துப்பாட்டு    பதினெண் மேற்கணக்கு நூல்கள்

**எட்டுத்தொகை நூல்கள் அகத்திணை நூல்கள்**

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. அகநானூறு
4. கலித்தொகை
5. ஐங்குறுநூறு

**புறத்திணை நூல்கள்**

1. புறநானூறு
2. பதிற்றுப்பற்று
3. பரிபாடல்

**பத்துப்பாட்டு நூல்கள் அகத்திணை நூல்கள்**

1. குறிஞ்சிப்பாட்டு
2. முல்லைப்பாட்டு
3. பட்டினப்பாலை

**புறத்திணை நூல்கள்**

1. சிறுபாணாற்றுப்படை
2. பெரும்பாணாற்றுப்படை
3. கூத்தராற்றுப்படை / மலைபடுகடாம்
4. பொருநராற்றுப்படை
5. திருமுருகாற்றுப்படை

6. மதுரைக்காஞ்சி

7. நெடுநல்வாடை

**குறிப்பு** – 1. அகமும் புறமும் விரவிய நூல்கள் - பரிபாடல், பட்டினப்பாலை

2. அகமா புறமா எனும் சர்ச்சைக்குரிய நூல் - நெடுநல்வாடை

## தமிழ் இலக்கிய வரலாறு

**சங்க இலக்கியங்களைச் செய்யுள் மரபுக்கு ஏற்ப வகுத்துக் காட்டுக?**

பதினெண் மேற்கணக்கு நூல்கள்

**அகவற்பா** - எட்டுத்தொகை நூல்கள் - நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பற்று

ஆசிரயப்பா

பத்துப்பாட்டு நூல்கள் - திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு

- **கலிப்பா – எட்டுத்தொகை நூல்கள் – கலித்தொகை**
- **பரிபாட்டு – எட்டுத்தொகை நூல்கள் – பரிபாடல்**
- **வஞ்சி அடிகள் விரவிய ஆசிரியப்பா – பத்துப்பாட்டு நூல்கள் – மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை**

### சங்க கால புறத்திணை இலக்கியங்களின் தனித்துவமான பண்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

சங்க இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கை முறையின் அடிப்படையில் அகத்திணை, புறத்திணை என்ற பிரதான பொருள் மரபுகளை உள்ளடக்கியுள்ளன. புறத்திணை என்பது காதல் சாராத ஏனையவற்றைப் பாடுவதாகும். சிறப்பாக போரொழுக்கமும் வீரம், கொடை, நிலையாமை முதலியனவும் புறத்திணையின் பாற்படும். பெயர் சுட்டிய காதற் பாடல்களும் புறத்திணையாகவே கொள்ளப்படும். (சங்கப்புறத்திணை இலக்கியங்கள் குறிப்பிடப்படவேண்டும்)

1.சங்கப் புறப்பொருள் மரபு என்று தனித்துவமாக நோக்குகின்றபோது ஐவகைப் போரொழுக்கங்களும், காஞ்சித்திணையும், பாடாண்திணையும் புறத்திணையுள் அடங்கும். போர் ஒழுக்கங்கள் போருக்குச் செல்லும் போது சூடிச்சென்ற பூக்களின் பெயரினாலேயே அழைக்கப்பட்டன. அந்தவகையில்

**குறிஞ்சி – வெட்சி**

**முல்லை – வஞ்சி**

**மருதம் – உழிஞை**

**நெய்தல் – தும்பை**

**பாலை – வாகை**

ஆகியன போர் ஒழுக்கங்களாகக் கொள்ளப்பட்டன.

2. காஞ்சித்திணை என்பது யாக்கை, செல்வம், இளமை முதலானவற்றின் நிலையாமையைப் பாடுவதாகும். இது ஆண்பாற்காஞ்சி, பெண்பாற்காஞ்சி என இரு வகைப்படும்.
3. பாடாண்திணை என்பது பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு எனப்படும். ஒருவரது வீரம், கொடை, புகழ் பற்றிப் புகழ்ந்து கூறுதலும் அறிவுரை கூறி வாழ்த்துதலுமாகும்.
4. புறப்பாடல்கள் புலவர் கூற்றாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.
5. பெயர் சுட்டிப்பாடும் மரபு

6. மன்னர்களுக்கு நல்லறிவூட்டலும், வாழ்த்துப்பாடலும்
7. ஆற்றுப்படுத்தும் பண்பு
8. இரங்கிப்பாடுதல்
9. இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
10. ஆசிரியப்பா கையாளப்பட்டுள்ளமை
11. மன்னர் புகழ் பாடுதல்

**சங்கப்புறத்திணை இலக்கியங்கள்**

**எட்டுத்தொகை**

1. புறநானூறு
2. பதிற்றுப்பற்று
3. பரிபாடல்

**பத்துப்பாட்டு**

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. பெரும்பாணாற்றுப்படை
4. சிறுபாணாற்றுப்படை
5. கூத்தராற்றுப்படை
6. மதுரைக்காஞ்சி
7. நெடுநல்வாடை

**சங்ககாலத்தில் எழுந்த ஆற்றுப்படை நூல்கள்**

1. திருமுருகாற்றுப்படை
2. சிறுபாணாற்றுப்படை
3. பொருநராற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப்படை
5. கூத்தராற்றுப்படை / மலைபடுகடாம்

**ஆற்றுப்படை இலக்கியங்களின் பண்புகள்**

ஆற்றுப்படை என்பது வழிப்படுத்தல் எனப் பொருள்படும். கூத்தர், பாணர் முதலியோர் ஒரு வள்ளலிடம் சென்று பொருள் பெற்று மீண்டு வரும் வழியில் வறுமையில் வாடிய இரவலனைக்காணின் தாம் பெற்ற செல்வத்தை இரவலர்க்கு கூறி பொருள் பெறுமாறு வழிப்படுத்தல் ஆற்றுப்படை எனப்படும்.

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

..................

**பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇ**

என்ற தொல்காப்பியச் செய்யுள் ஆற்றுப்படை இலக்கணத்தைக்கூறுகிறது.

**இதில் மூன்று பண்புகள் இடம்பெறுகின்றன.**

1. பொருள் பெற்றவன் பெறாதவனை நோக்கி விளித்தல். புறநானூற்றில் வரும் "பாணன் சூடிய" என்ற தனிப் பாடலில் பொருள்பெற்ற பாணன் பொருள் பெறாத பாணனை நோக்கி "காரெனொக்கல் கடும்பசி இரவல" என விளிக்கின்றான்.

2. கொடை கொடுத்தோன் சிறப்புக் கூறல்.
பொருள் பெற்ற பாணன் கொடை கொடுத்த பேகனின் சிறப்பை

**"உடாஅபோரா வாகுதலறிந்தும்
படாஅ மஞ்ஞைக்கு ஈத்தஎம்கோ"
எத்துணையாயினும் ஈதல் நன்று....**

3. வள்ளலை அடைவதற்கான வழி கூறல்
ஆற்றுப்படை இலக்கியம் பெற்ற வளர்ச்சி
ஆரம்பத்தில் புறநானூற்றில் தனிப்பாடல்களில் ஆற்றுப்படைத் துறையாக தோன்றின

உ-ம் "பாணன் சூடிய" என்ற பாடல் பின்னர் நெடும்பாட்டாக ஆற்றுப்படை இலக்கியமாக வளர்ச்சி கண்டது.

உ-ம் பெரும்பாணாற்றுப்படை கரிகாலனையும் பெரும்பாணாற்றுப்படை இளந்திரையனையும் பாடுவது குறிப்பிடத்தக்கது.
ஆரம்பத்தில் அரசரிடமும் வள்ளலிடமும் ஆற்றுப் படுத்திய இவ்விலக்கியம் இறைவனிடம் ஆற்றுப்படுத்தியது.
உ-ம் திருமுருகாற்றுப்படை

ஆற்றுப்படை நூல்களில் திருமுருகாற்றுப்படை ஏனைய நூல்களில் இருந்து வேறுபட்டதாக அமைகின்றது. ஏனைய ஆற்றுப்படை நூல்கள் இம்மை வாழ்விற்குரிய பொருளை வேண்டுவதாக அமைய திருமுருகாற்றுப்படை மறுமை வாழ்விற்கான அருள்வேண்டி ஆற்றுப்படுத்துவனவாக அமைகின்றது.
ஏனைய ஆற்றுப்படை இலக்கியங்கள் யாரை ஆற்றுப்படுத்துகின்றனவோ அவர்களின் பெயரால் அமையப் பெற அமைய திருமுருகாற்றுப்படை மறுமை வாழ்வுக்கான அருள் வேண்டி ஆற்றுப்படுத்துவனவாக அமைகின்றது.

உ-ம் கூத்தராற்றுப்படை - கூத்தரை ஆற்றுப்படுத்துவதனால் கூத்தராற்றுப்படை எனப்படுகின்றது.
திருமுருகாற்றுப்படை - முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைகின்றது.

**நெடுநல் வாடையைப் புறத்திணை இலக்கியம் எனக் கொள்வது எவ்வாறு பொருந்தும் என்பதைப் பரிசீலிக்குக.**

நெடுமை + நன்மை + வாடை எனப் பிரித்துப் பொருள் கொள்ளும்போது நீண்ட நன்மை தருகின்ற வாடை எனப் பொருள் கொள்ளலாம். இங்கு மண்ணாசை கொண்டு படையெடுத்துச் சென்ற தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நன்மை தருகின்ற வாடைக் காற்றாக அது அமைந்துள்ளது எனப் பொருள் கொள்ளலாம். - மண்ணாசை காரணமாகப் போரிடுவது வஞ்சித்திணை ஆகும். நெடுநல்வாடையும் வஞ்சித்திணையிலே அமைந்துள்ளது. வஞ்சித் திணைத்துறைகளுள் கொற்றவையைப் புகழ்ந்து வழிபடுவதும் ஒன்று. நெடுநல்வாடையை பாட்டின் முழு அமைப்பும் கொற்றவையை வேண்டிக் கொள்வதாகவே அமைந்துள்ளது.

நெடுநல்வாடையில் வருகின்ற "வேம்பு தலையாத்த நோன் காழ் எ∴கம்" என்ற பாடல் அடியானது பாட்டுடைத்தலைவன் பாண்டியன் என்பதை வெளிப்படுத்துகின்றது. இங்கு பெயர் குறிப்பாகச் சுட்டப் பட்டிருக்குமாற்றைக் காணலாம். சுட்டி ஒருவர் பெயர் கொள்ளுமாயின் காதற்பாக்களும் புறத்திணை சார்ந்ததாகவே கொள்ளப்படும் என்பது இலக்கிய மரபு. ஆதலால். நெடுநல்வாடையை புறத்திணையின் பாற்கொள்வதே பொருந்தும்.

நெடுநல்வாடையில் தலைவியின் காதல் உணர்வு விரிவாகப் பேசப்பட்டாலும் அதனூடாக தலைவனது வீரமும் ஆளுமையுமே மிகுதியும் புலப்படுத்தப்படுவதால் நெடுநல்வாடையை புறத்திணை கூறும் நூலாகவே அடையாளம் காட்டுகின்றார் எனக் கொண்டால் இது பாண்டியன் பெயர் சூட்டிப்பாடப்பட்ட புறப்பாடல் எனக்கொள்ளமுடியாது. எனவே நெடுநல் வாடையை புறத்திணையின் பாற் சேர்ப்பது தவறு என பேராசிரியர் வ.சுப.மாணிக்கம் தன் "தமிழ்க்காதல்" நூலில் குறிப்பிடுவார். இதனை அடிப்படையாகக் கொண்டு தற்காலத்து இலக்கிய ஆய்வாளர்கள் நெடுநல்வாடையை அகத்திணைக்குரிய நூலாகவே கருதுவர்.

**5. புலவர்களிற்கும் மன்னர்களிற்கும் இடையிலான தொடர்பு சங்க இலக்கியங்களில் வெளிப்படுமாற்றினை தெளிவுபடுத்துக.**

**1. மன்னன் இறந்தபோது அவன் பிரிவைத் தாங்க முடியாது துன்பப்பட்டு இயற்கையை விளித்துக் கூறுதல்**

உ-ம் ஒல்லையூர் நாட்டுச் சாத்தான் இறந்தபோது குடவாயில் கீரத்தனார் பாடியமை
.....ஆண்மை தோன்ற ஆடவர் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே

**2. புலவர்கள் மன்னனுக்காக நட்புரிமையோடு ஆலோசனைகளைப் பகர்கின்றனர்.**

உ-ம் வெள்ளைக்குடி நாகனார் கிள்ளிவளவனுக்கு அறிவுரை கூறல்
பகடுபுறந்தருனர் பாரமோம்பிக்
குடிபுறந்தருவை ஆயின்
அடிபுறந்தருகுவர் அடங்காதோரே

**3. மன்னனது குடும்ப உறவுகளிலும் அந்நியோன்னியமாக ஈடுபட்டிருந்தமை.**

உ-ம் போர்க்களத்திலே போர் புரிந்துகொண்டிருந்த அதியமான் தனக்குப் பிறந்தகுழந்தையைப் பார்பதற்கு அரண்மனை வந்தபோது அவனது தோற்றப்பொலிவை
கையது மேலே காலது புனைகழல்
மெய்யது வியரே மிடன்றது பசும்பொன்....... என்று ஔவையார் பாராட்டுகின்றார்.

**4. மன்னனின் மனநிலையை புலவன் அறிந்து வைத்திருந்தமை**

உ-ம் பாரி மன்னனை எவ்வாறு வெற்றி கொள்ளலாம் என்பதைக் கபிலர் அறிந்திருந்தமை.
யான் அறிகுவன் அதுகொள்ளும் ஆறெ
விரையொலி கூத்தலும் கூத்தலும் பன்லர
ஆடினர் பாடினர் செல்லினே நாடும் குன்றும்
ஒருங்கு ஈயும்மே.
**5. அதியமான் மன்னன் ஔவைக்கு நெல்லிக்கனி ஈர்ந்தமை.**
**6. மன்னர்களின் இழப்பில் புலவர்கள் வடக்கிருத்தல்**
**7. சமாதானத் தூதுவர்களாக செயற்பட்டமை**
**8. தேவையற்ற போர்களைத் தவிர்க்க உதவியமை**
**9.புலவர்களை மன்னர்கள் சிறப்பாக உபசரித்தமை.**

**6. சங்கப்புலவர்கள் அக்கால மன்னர்களுக்கு நல்லறிவு ஊட்ட முனைந்தமையை சங்கப்பாடல்களின் துணைகொண்டு விளக்குக.**

**1. அறத்துடன் கூடிய செங்கோலாட்சி நடத்துமாறு வலியுறுத்தல்.**

உ-ம் -
அறம் புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் வதன் எளியோரின்
உறை வேண்டு பொழுதற் பெயல் பெற்றோரே........புறநானூறு.

**2. உயிர்களைப் பாதுகாப்பதே மன்னனின் கடமை என்பதை வலியுறுத்தினர்.**

உ-ம் - கண்பொர விளங்கும் நின் விண்பொருவியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றே துன்றே வருந்திய
குடிமறைப்பதுவே................புறநானூறு

**3. கோள் சொல்வோரின் சொல்லைக் கேளாது தகுதி நிலைமையோடு வாழும்படி கூறினார்.**

உ-ம்
நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது......

**4. போரினால் வரும் தீமைகளை எடுத்துக்காட்டி போரில் ஈடுபடுவதைத் தடுத்துள்ளனர்.**

ஓவாது உழற்றும் நின்பெருநாடே.....

**5. பகைமன்னர்களுக்கு வீர உணர்வை ஊட்டினர். பகைவரின் நாடு எரியும் வெப்பத்தால் உனது தலை மாலை வாடுதல்**

**6. உயர் அறங்களை வலியுறுத்தல்**

உ-ம் தீதும் நன்றும் பிறர் தர வாரா.................. புறநானூறு

**சிறுகுறிப்பு :** வரிவிதிப்பை முறையாக மேற்கொள்ளுமாறு கூறுதல் " யானைபுக்க புலம் போல.." பிசிராந்தையர் பாடியமை

**பரிபாடல்**

பதினெண்மேற்கணக்கு இலக்கியங்களில் ஒன்றாக இடம்பெறுவது. அகம் புறம் என இரு திணைகளும் கலந்து பாடப்பட்டுள்ளது. பரிந்துவரும் இசைப்பாடல்களால் ஆன பாவகை பரிபாட்டு எனப்படும். பரிபாட்லில் மொத்தம் 70 பாடல்கள் இருந்ததாகத் தெரிய வருகின்றது. தற்போது 22 பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன.

பரிபாடலில் வையை பற்றிய 8 பாடல்களிலும் அகம் சார்ந்த செய்திகள் காணப்படுகின்றன. திருமால், செவ்வேள், பற்றிய 14 பாடல்களும் இறைவனைப்பற்றிய பாடல்களாக இடம் பெறுகின்றன. புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற வீரம், செல்வம், கொடை முதலான செய்திகளைப் பரிபாடலிலே காணமுடிவதில்லை. அகம் சாராத சமயப்பாடல்களே புறத்திணைப் பாடல்களாகக் காணப்படுகின்றன.

1. தெய்வங்கள் அடிப்படையில் பகுப்பு முறை அமைந்த ஒரே நூலாகும் (சாக்தம், கௌமாரம், வைணவம் என்னும் மூன்று சமயங்கம் மட்டும்)
2. சங்ககாலத்திற்குப் பிறகு “பரிபாட்டு” என்னும் பாவடிவம் போற்றப்படவில்லை.

3. பண்டைய தமிழர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வினையும், இயற்கைப் பொருட்களை இறைவனாகவே கண்டு வழிபடும் சிறப்பினையும் இவ்விலக்கியம் வெளிப்படுத்துகின்றது.

**பட்டினப்பாலை**

பதினெண்மேற்கணக்கு நூல்களுள் ஒன்றாக இடம்பெறும் பட்டினப்பாலை அகமும புறமும் கலந்த நூலாக அமைந்துள்ளது. நெய்தல் நிலமான காவிரிப்பூம் பட்டினத்தை சிறப்பித்துப் பாடுகின்றது.
பாடிய புலவர் - கடியலூர் உருத்திரங்கண்ணனார்.
கடல்சூழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தைப்பாடியதால் புறத்திணை இவ்வாறு அகத்திணையும் புறத்திணையும் கலந்து வருவதால் அகமும் புறமும் விரவிய நூலாக இடம்பெற்றுள்ளது.
காவிரிப்பூம்பட்டினத்தின் வளங்கள் அனைத்தையும் கூறிய பின்னர் சோழனின் வீரம், வெற்றி முதலானவற்றை உருத்திரங்கண்ணனார் விபரிக்கின்றார்.

301 வரிகளை உடைய பட்டினப்பாலையில் 5வரிகள் மட்டுமே அகத்திணைச் செய்திகளாயினும் ஏனைய 296 வரிகளும் இந்த 5 வரிகளுக்கும் உரமூட்டுவதாய் அமைந்துள்ளன.

**திருமுருகாற்றுப்படை**

சங்ககால ஆற்றுப்படை இலக்கியங்களில் ஒன்றாகும். நக்கீரரால் பாடப்பட்டது. 317அடிகளைக்கொண்டு ஆசிரியப்பாவால் அமைந்தது. புலவராற்றுப்படை எனவும் அழைக்கப்படும்.

இது திருப்பரங்குன்றம் முதல் பழமுதிர்ச்சோலை வரைஉள்ள ஆறுபடை வீடுகளிலும் முருகன் உறைந்து அடியார்க்கு அருளும் இயல்பினையும் அவனை வழிபடும் முறைகளையும் விளக்கி நிற்கின்றது. சங்ககால அகப்பொருள் மரபை உள்வாங்கி எழுந்த பக்திசார் இலக்கியமாக அமைந்துள்ளது.

இது ஏனைய ஆற்றுப்படை இலக்கிய மரபை மீறி அமைந்தது பிற ஆற்றுப்படை நூல்கள் பொருநன், பெரும்பாணன், சிறுபாணன், கூத்தன் ஆகிய இரவலரைப் புலவரிடம் ஆற்றுப்படுத்த இது அருள்வேண்டுவோரை முருகனிடம் ஆற்றுப்படுத்துகின்றது.
ஏனைய ஆற்றுப்படைகள் ஆற்றுப்டுத்தப்படுபவர் பெயரில் அமைய இது ஆற்றுப்டுத்தப்படும் தலைவனின் அதாவது முருகன் பெயரில் அமைந்தது.

**மன்னர்களைப் புகழ்ந்து பாடும் சங்க இலக்கிய மரபு பிற்காலத்தில் எவ்வாறு வளர்ச்சி பெறுகின்றது?**

சங்க காலத்தில் மன்னர்களது வீரம், கொடை, ஆட்சிச்சிறப்பு என்பன புகழ்ந்து பாடப்பட்டன. புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்களில் மன்னர்களது வீரம், வலிமை என்பனவும் பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை போன்ற நூல்களில் மன்னர்களது கொடைச்சிறப்பும் புகழ்ந்து பாடப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் இவை வளர்ச்சி பெற்ற விதம்
சங்கமருவிய காலத்தில் - களவழி நாற்பதிலும் (சோழன் கோச்செங்கணானின் வீரம்)
பல்லவர் காலத்தில் - முத்தொள்ளாயிரம், பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம், பெருங்கதை போன்ற நூல்களிலும்

| | |
|---|---|
| சோழர் காலத்தில் - | விக்கிரமசோழன் உலா, இராசராசன் உலா, குலோத்துங்கசோழன் உலா, சீவகசிந்தாமணி, கலிங்கத்துப்பரணி போன்ற நூல்களிலும் மன்னரின் போர், வெற்றி, கோலச்சிறப்பு, அரசாட்சிசெய்யும் திறன் போன்றன சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன. |

**சங்ககால அகத்திணை மரபின் முக்கிய அம்சங்களை விளக்குக.**

1. சங்ககால இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டவை. அவை அகம், புறம் எனப்பாகுபடுத்தப்பட்டு நோக்கப்படுகின்றன. அகத்திணை மரபு பெயர் சுட்டாத காதற்பாக்களாகக் காணப்படுதல்.

2. அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, ஐங்குறுநூறு என்பனவாகும்.

3. அகத்திணை மரபின் முக்கிய அம்சங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
அன்பினைந்திணை ஒழுக்கங்கள் - புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்
கைக்கிளை, பெருந்திணை
சுட்டியொருவர் பெயர் சொல்லாமரபு
முதல், கரு, உரிப் பொருளில் செய்யுள் அமைத்தல்
உள்ளுறையுவமம், இறைச்சி என்னும் இரு சிறப்பான அணிப்பிரயோகங்கள்
அன்பின் ஐந்திணை வாழ்க்கை நடைமுறைகளை வெளிப்படுத்தும் பாத்திரக்கூற்றுக்களில் பாடுதல் (தலைவன், தலைவி, தோழி போன்றோர்)
ஆசிரியப் பாவினால் பாடப்படுதல் எனினும் கலித்தொகை (அகவல்) கலிப்பாவினால் பாடப்பட்டுள்ளது.
கற்பனைக்கலப்பு
தூது அனுப்பும் மரபு (அகப்பொருள் தூது)
நற்றிணைத்தலைவி - வண்டு
குறுந்தொகைத்தலைவி - தும்பி
அகநாநூற்றுத்தலைவி - நண்டு
நாடவழக்கு புலநெறி வழக்கு இவற்றை ஆதாரமாகக் கொண்டவை.
இயற்கை வர்ணனை மிகையாக இல்லாமை.

1. **சங்கமருவிய காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்துக.**

2. **சங்கமருவிய கால இலக்கிய மரபு, சங்க கால இலக்கிய மரபில் இருந்து வேறுபடுமாற்றை தெளிவுபடுத்துக.**
   **ஆ) அவ்வாறு அம்மரபு வேறுபட்டமைக்கான காரணங்களைச் சுருக்கமாகத் தருக.**

3. **சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் அதிகம் தோன்றியமைக்கான சமூக, அரசியல் காரணிகளை எடுத்துக்காட்டுக.**
4. **சங்கமருவிய கால இலக்கியங்களில் அகத்திணை மரபு இடம்பெறுமாற்றை விளக்குக.**

5. **சங்கமருவிய காலம் பக்தி இலக்கியத்தின் தோற்றகாலமாக அமையுமாற்றை தெளிவுபடுத்துக.**

6. **சங்கமருவிய கால இலக்கியப்பண்புக்கும் பல்லவர்கால இலக்கியப் பண்புக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை வீளக்குக.**

**7. சங்கமருவிய காலத்தில் எழுந்த காவியங்களை குறிப்பிட்டு அவற்றின் பண்புகளை எடுத்துக் காட்டுக.**

**இன்பம்**

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே .......... என்ற பாடலின் ஊடாக கோவலனினதும் கண்ணகியினதும் இன்பம் துய்த்தல் எடுத்துக் காட்டப்படுகின்றது.
கோவலன் - மாதவியினதும் இன்ப நிலையும் இங்கு காட்டப்படுகின்றது.
வீடுபேறு
சிலப்பதிகாரத்தில் கண்ணகி தேவர்களினால் அழைத்துச்செல்லப்படுதல்
மணிமேகலை மணிமேகலா தெய்வமாக போற்றப்படுதல்.

சிலப்பதிகாரத்தில் - நாடு நகர் வர்ணனைச் சிறப்புக் கூறப்படுதல்.
சோழநாடு - பூம்புகார் என்பவற்றின் வருணனையைக்குறிப்பிடலாம்.
காவிரி அழகினை

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்து
கருங்கயல் கண் விழித்தொங்கி
நடந்தாய் வாழி காவேரி" எனக்குறிப்பிடுகின்றார்.

சிலப்பதிகாரத்தில் - கடவுள் வாழ்த்துக் கூறப்படுதல்
ஞாயிறு போற்றிதும் ஞாயிறு போற்றிதும்.
மணிமேகலையில் - கடவுள் வாழ்த்துக் கூறப்படுதல்.

**தன்னிகரில்லாத் தலைவன்**

சிலப்பதிகாரம் - கோவலன்
மணிமேகலை - மணிமேகலை

**உயிர் மீட்பு**

சிலப்பதிகாரத்தில் - கோவலன் உயிர் பெற்றெழுதல்
மணிமேகலையில் - உதயகுமாரன் உயிர் பெற்றெழுதல்

**காண்ட அமைப்புக் காணப்படுதல்**

சிலப்பதிகாரத்தில் - வஞ்சிக்காண்டம், புகார்க்காண்டம், மதுரைக்காண்டம்

## சங்கமருவிய கால இலக்கியங்களின் வகைப்பாடு

### பதினெண் கீழ் கணக்கு நூல்கள்

**அறநூல்கள்**

1.நாலடியார்
2.நான்மணிக்கடிகை
3. இன்னாநாற்பது
4. இனியவை நாற்பது
5. திருக்குறள்
6. திரிகடுகம்
7. ஆசாரக்கோவை
8. பழமொழி நானூறு
9. சிறுபஞ்சமூலம்
10. முதுமொழிக்காஞ்சி
11. ஏலாதி

**அகத்திணை நூல்கள்**

1. கார்நாற்பது
2. ஐந்திணை ஐம்பது
3. ஐந்திணை எழுபது
4. திணைமொழி ஐம்பது
5. திணைமாலை நூற்றைம்பது
6. கைந்நிலை

**புறத்திணை நூல்கள்**

1. களவழி நாற்பது

**பக்தி இலக்கியங்கள்**

1. 1ம் திருவந்தாதி - பொய்கையாழ்வார்
2. 2ம் திருவந்தாதி - பூதத்தாழ்வார்
3. 3ம் திருவந்தாதி - பேயாழ்வார்
4. அற்புதத்திருவந்தாதி
5. திருவிரட்டை மணிமாலை - காரைக்காலம்மையார்
6. திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் - காரைக்காலம்மையார்
7. திருவாபங்காட்டு திருப்பதிகம் - காரைக்காலம்மையார்

**காப்பிய இலக்கியங்கள்**

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை } இரட்டைக்காப்பியங்கள்

**இலக்கண நூல்**

1. தொல்காப்பியம்

**சங்கமருவிய கால இலக்கிய மரபு சங்ககால இலக்கிய மரபில் இருந்து வேறுபடுமாற்றை தெளிவுபடுத்துக.**

**சங்ககாலம்**

1. பொருள் - அகம், புறம்
2. தனிநிலைச் செய்யுள்மரபு
3. வடமொழிக்கலப்பு மிகக்குறைவு
4. பாவகை - அகவல், வஞ்சி
5. மக்கள் எப்படி வாழ்ந்தனர் என்பதை எடுத்துக் கூறுகின்றது.
6. சமயச் சார்பு குறைவு

**சங்கமருவியகாலம்**

அறம், பக்தி
தொடர்நிலைச் செய்யுள் மரபு
வடமொழிக்கலப்பு அதிகம்
வெண்பா

மக்கள் எப்படி வாழ வேண்டும் எனக் கூறுகின்றன
சமயச் சார்பு அதிகம்

**ஆ) அரசியல் சமூக காரணிகள் செல்வாக்குச் செலுத்தின.**

சங்க இலக்கியங்களில் மக்கள் வாழ்க்கை பாடுபொருளாக காணப்பட்டமையினால் அவற்றைப் பாடும் அக புற இலக்கியங்கள் தோற்றம் சங்கமருவிய காலத்தில் களப்பிரர் ஆட்சியினால் சமூகச்சீரழிவு காணப்பட்டமையினால் அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தேவைப்பாடு அக்காலத்தில் அற இலக்கியங்கள் தோற்றம் பிற்காலத்தில் அம்மையார், ஆழ்வார் முயற்சியினால் பக்தி இலக்கியங்கள் வெளிப்பட்டமை.

சங்க காலத்தில் தமிழ் மன்னன் ஆட்சி நிலவியமையினால் செய்யுட்களில் வடமொழிச் செல்வாக்கு மிக மிகக் குறைவு. சங்கமருவிய காலத்தில் களப்பிரர் ஆட்சி, ஆரியர் வருகை, சமண பௌத்த மதங்களின் செல்வாக்கு என்பவற்றினால் வடமொழிச் செல்வாக்கு அக்கால இலக்கியங்களில் மிகுதியும் காணப்படுகின்றன.

சங்க கால இலக்கியங்கள் கூற்றுநிலைப் பாடல்களாகக் காணப்பட்டமையினால் அகவலோசை கொண்ட ஆசிரியப்பாவின் மிகுதியான செய்யுள்கள் தோற்றம் பெற்றன. அறநீதிககருத்துக்களைக் கூற செப்பலோசை குன்றாத வினாவுக்கு விடை கூறும் பாங்கிலமைந்த வெண்பா யாப்பு பொருத்தமாக அமைந்தமையினால் அக்காலத்தில் வெண்பா யாப்பு செல்வாக்குப் பெற்றது.

சங்ககால இலக்கியங்களில் மக்கள் வாழ்க்கை பாடுபொருளாக அமைந்தமையினால் அக்கால மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அக்கால இலக்கியங்கள் பாடி நிற்கின்றன. சங்கமருவிய காலத்தில் களப்பிரர் ஆட்சி நிலவியமையினால் மக்கள் வாழ்க்கை அறநெறிப்பட்டதாக அமையவில்லை. இந்நிலையில் அறநெறிப்பட்ட சமுதாயம் ஒன்றினை உருவாக்க வேண்டிய தேவை அக்காலத்தில் காணப்பட்டமையினால் அக்கால அற இலக்கியங்கள் எப்படி வாழ வேண்டும் எனக் கூறுகின்றன.

## சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் அதிகம் தோன்றியமைக்கான சமூகக்காரணிகள்

**சமூக ஒழுக்கச் சீரழிவு**

- சங்க கால களவியல் ஒழுக்கம் சங்கமருவிய காலத்திலும் தொடர்ந்தமை
- அகப்புற வாழ்வில் ஏற்பட்ட சலிப்புத்தன்மை
- அறக்கருத்துக்களை வலியுறுத்துகின்ற சமண, பௌத்த மதங்களின் எழுச்சி
- சைவ, வைணவப் புலவர்களும் அறத்தைப் பாட விளைந்தமை - இன்னாநாற்பது, இனியவைநாற்பது, திரிகடுகம் முதலான நூற்கள் முறையே கபிலர், பூதன் சேந்தனார், நல்லாநனார் முதலான சைவப்புலவர்களாலும் நான்மடிக்கடிகை விளம்பிநாகனார் என்னும் வைணவப்புலவராலும் பாடப்பட்டமை.
- வச்சிரநந்தி முதலான சமணத்துறவிகள் சங்கம் அமைத்து அதனூடாக நீதி நூல்கள் வெளிவந்தமை. பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி முதலான நூல்கள் எழுந்தமை.
- அறநெறிப்பட்ட சமூகத்தை உருவாக்க விளைந்தமை
  அரசியற் காரணிகள் - ஆட்சியாளர்கள் களப்பிரராகக் காணப்பட்டமையினால் மக்களிற் கும் ஆட்சியாளர்களிற்கும் இ டையே உறவின்மை காணப்பட்டமை.

**சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் அதிகம் தோற்றம் பெற்றமைக்கான காரணிகளைக் கூறுக?**

⏭ அறநெறிக்காலம் என்று அழைக்கப்படும் சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறம் கூறப்படுகின்றது. இவ்வாறு அறநூல்கள் அதிகம் எழக்காரணங்களாக

- ⏭ களப்பிரர் படையெடுப்பும், அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களும் அறநூல்கள் தோன்றக்காரணமாகின.
- ⏭ களப்பிரரின் கொடுங்கோலாட்சி தமிழ்ச்சமுதாயத்தைச் சீர்கேடாக்கியமையினால் அவற்றைச் சீர்செய்ய திருக்குறள்போன்ற அறநூல்கள் தோற்றம் பெற்றன.
- ⏭ ஒழுக்கச் சீர்கேடுகளும், பொருளாதார வறுமையும் காணப்பட்டமையினால் அவற்றைச் சீர்திருத்தவே அறநூல்கள் தோன்றக் காரணமாயின.
- ⏭ சங்ககால அக, புறவாழ்க்கையும் போர் வாழ்க்கையும் ஏற்படுத்திய தாக்கமே அறநூல்கள் தோன்றக் காரணமாயின.
- ⏭ களப்பினரின் வருகையோடு சமண பௌத்த மதங்களின் செல்வாக்கும் அச்சமயங்கள் போதித்த அறக்கருத்துக்களும் அறநூல்கள் தோன்றக் காரணமாகியது.
- ⏭ ஆட்சியாளர்கள் அறக்கருத்துக்களை அதிகம் ஆதரிததமையினால் அறக்கருத்துக்கள் கொண்ட நூல்கள் அதிகம் எழுந்தன.

**சங்ககால இலக்கியப்பண்புகள் பிற்கால இலக்கியங்களில் எவ்வாறு வளர்ந்துள்ளன என்பதை சுருக்கமாக விளக்குக.**

சங்க இலக்கியங்களைப் பொருள் அடிப்படையில் அகம், புறம் என இருவகைப்படச்சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாக்காதல் பாடல்கள் அகத்திணையிலும், ஏனைய யாவும் புறத்திணையிலும் அடக்கப்பட்டன. புறத்திணை இலக்கியப் பண்புகளாக

- ⏭ **பெயர் சுட்டும் காதற்பாக்கள்**
- ⏭ **போர், வீரம், கொடை பற்றிய செய்திகள்**
- ⏭ **ஆற்றுப் படுத்தல் பண்புகள்**
- ⏭ **நிலையாமைக் கருத்துக்கள்**
- ⏭ **மன்னர் புகழ் பாடுதல்**
- ⏭ **மன்னர்களுக்கு நல்லறிவூட்டல் பண்பு**

**இவை பிற்காலத்தில் எவ்வாறு மாற்றமடைந்தன என நோக்குவோம்.**

▼ சங்ககால போர் ஒழுக்கமானது சங்கமருவிய காலத்தில் களவழிநாற்பது எனும் நூல் எழுந்ததன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

▼ இதேபோன்று சங்ககாலத்து மன்னர் புகழ்பாடும் பண்பானது அதாவது புறனாநூற்றுச் செய்யுட்களிலே பேகன் முதலானவர்களைப் புகழ் பாடும் பண்பானது சங்கமருவியகாலத்தில் எழுந்த களவழி நாற்பதில் சோழமன்னனின் புகழ்பாடும் சிறப்பின் மூலம் காணலாம்.

▼ சங்ககாலத்தில் எழுந்த காஞ்சித்திணை நிலையாமைக் கருத்துக்களைக் கூறும் வேளையில் இது சங்கமருவிய காலத்தில் எழுந்த மணிமேகலை துறவு நிலையினைக் கூறுவதனைக் காணலாம். வாழ்க்கை நிலையாமை பற்றிய கருத்துக்கள் மணிமேகலையில் காணப்படுதல்.

▼ அளிதோதானே பாரியது பறம்பே....... என்ற பாடல் பெயர் சுட்டப்படும் பண்பானது சங்கமருவிய காலத்தில் எழுந்த களவழிநாற்பதில் கோச் செங்கனான்......... என்று பெயர் சுட்டும் பண்பு தொடர்கிறது.

**இவ்வாறு சங்கமருவிய காலத்தில் மாற்றமுறும் பண்பானது பல்லவர்காலத்தில் எவ்வாறு மாற்றமுறுகின்றது என நோக்குவோம்.**

▼ சங்ககால, சங்கமருவிய கால நிலையாமைக் கருத்தானது பல்லவர் காலத்து "வாழ்வது மாயம், மண்ணாவது திண்ணம்........ எனும் பாடல் இதனை வலியுறுத்துகின்றது.

▼ சங்ககாலத்து ஆற்றுப்படுத்தும் பண்பானது பல்லவர்காலத்தில் மக்களைப் பக்தி நெறியில் வழிப்படுத்துவதற்குப் பயன்படுத்தியதைக் காணலாம்.

▼ மேலும் சங்க காலத்து மன்னர் புகழ்பாடும் பண்பானது பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற முத்தொள்ளாயிரம், பாண்டிக்கோவை, ஆகியவற்றில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் புகழ்ந்து பாடப்படுவதன் மூலம் தொடர்வதைக்காணலாம்.
முத்தொள்ளாயிரம் - சேர, சோழ, பாண்டியன் பாடப்படுதல்
பாண்டிகோவை - பாண்டியமன்னன் சிறப்பு பாடப்படுதல்

▼ இவை சோழர் காலத்தில் எவ்வாறு வளர்ந்துள்ளது என நோக்கும் போது சோழர்காலப்பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் மன்னர் புகழ் பாடும் பண்புகள் இடம்பெற்றுள்ளதை அறியலாம்.
சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்றவற்றிலும் கலிங்கத்துப்பரணி, மூவருலா, குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் போன்றவற்றிலும் போர், வீரம், புகழ் என்பன சங்ககாலப் புறத்திணைப் பண்புகள் பேசப்படுவதைக் காணலாம்.

▼ மேலும் அறக்கருத்துத்துக்களையும் நிலையாமைக் கருத்துக்களையும் அக்கால இலக்கியங்கள் பேசுவதைக்காணலாம்.

▼ திருமுறைகள், நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் என்பவற்றிலும் பக்தி பேசப்படுவதைக் காணலாம்.
மேலும் சங்ககால புறத்திணை இலக்கியப்பண்புகள் நாயக்கர் காலத்தில் தோற்றம் பெற்ற பரணி, உலா, கலம்பகம் போன்றவற்றில் பேசப்படுகின்றது. உ-ம் கையிலுள்ள வெற்றி பொருந்திய வாளே வீரவாள்...... எனும் பாடல் குறிப்பிடத்தக்கது.

சங்கப்பாடலில் "கறைமிடற்று அண்ணல்" "நீலமேனி வாலிளைபாகத்தொருவன்" "முக்கண்செல்வன்" இறைவன் எனப்போற்றப்படுகின்றார். இதுபோன்று 06 பாடல்கள் திருமாலுக்கும் 8பாடல்கள் முருகனுக்கும் பாடப்பட்டமை. சங்கமருவியகாலப் பக்திநெறி அடியிட்டது. இது பல்லவர் காலத்திலும் தொடர்கின்றது. இதன் தொடர்ச்சியை பிற்பட்ட காலத்திலும் காணலாம்.

**சங்கமருவிய கால இலக்கியங்களில் அகத்திணை மரபு இடம்பெறுமாற்றை விளக்குக.**

சங்ககாலத்தில் காணப்பட்ட அகத்திணை நூல்களின் தொடர்ச்சியாக சங்கமருவிய காலத்திலும் இவ் அகத்திணை மரபு காணப்பட்டது. இச்சங்கமருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஆறு நூல்கள் அகத்திணையாகிய காதலைப் பாடுபொருளாகக் கொள்கின்றன. அவையாவன

**அகத்திணை நூல்களின் அடிப்படையில் :-**

**திணைமாலை நூற்றைம்பது**
**திணைமொழி ஐம்பது**
**ஐந்திணை ஐம்பது**
**ஐந்திணை எழுபது**
**கார் நாற்பது**
**கைந்திலை என்பனவாகும்**

இவற்றுள்ளும் ஐந்திணை ஐம்பதில் இடம்பெறுகின்ற
"சுனைவாய் சுறுநீரை எய்தாதென்று.....
காதலர் உள்ளம் படர்ந்த நெறி...."
எனும் பாடலடியைச் சான்றாகக்கொள்ளலாம்.

**அறநூல்களின் அடிப்படையில்**

மேலும் அறநூலாகிய திருக்குறளிலும் அகத்திணை பற்றிய செய்திகள் காமத்துப்பால் என்கின்ற தனிப்பிரிவிலே காட்டப்படுகின்றன. சான்றாக
"காலை அரும்பி பகலெல்லாம் நோக்கி......"
"ஏதிலார் போல பொது நோக்கு நோக்குதல்....."
"ஊடல் காமத்திற்கு இன்பம்......."
போன்ற குறளடிகளைக் குறிப்பிடலாம்.

**காவிய அடிப்படையில்**

அடுத்து காவியங்களிலும் காதல் பற்றிய செய்திகள் நிறையவே காணப்படுகின்றன. சான்றாக சிலப்பதிகாரத்தில் "விடுதல் அறியா விருப்பினனாக ....."
கோவலன் மாதவியில் மோகம் கொண்டதையும் துறவை வலியுறுத்தும் மணிமேகலையிலும் உதயகுமாரனின் காதல் இடம்பெறுவதைச் சுட்டலாம்.

**சங்கமருவியகாலம் பக்தி இலக்கியத்தின் தோற்ற காலமாக அமையுமாற்றை எடுத்துக்காட்டுக.**

- சங்கமருவியகாலத்தில் வாழ்ந்த காரைக்காலம்மையாரும் முதல்மூன்று ஆழ்வார்களும் பல்லவர்கால பக்தி இலக்கியத்திற்கு வழிகாட்டினர்.
- காரைக்காலம்மையாரினால் அற்புதத்திருவந்தாதி, திருவரட்டைமணிமாலை, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் என்பனவும் முதல் மூன்று ஆழ்வார்களினால் பக்திப் பாசுரங்களும் பாடப்பட்டமை.
- காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பல்லவர்கால பதிக வடிவத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது.

- இறைவனின் அகவுருவத்தோற்றத்தைப் பாடும் மரபிற்கு வித்திட்டவர்கள் காரைக்காலம்மையாரும் முதல்மூன்று ஆழ்வார்களுமாவார்.

- புராண இதிகாசக் கதைக்கருத்துக்களைப் பக்தி இலக்கியங்களில் சித்திரித்தல். எடுத்துக்காட்டு "செருக்கினால் வெற்பெடுத்த அருக்கன்"

- இசையினால் இறைவனைக்காணும் மரபு.

**சங்கமருவிய கால இலக்கியப் பண்புக்கும் பல்லவர்கால இலக்கியப் பண்புக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக?**

- அறம், நீதி, ஒழுக்கம் என்பவற்றைப் பிரதான பாடுபொருளாகக் கொண்டு அறநெறிக்காலமாக சங்கமருவியகாலம் திகழ்கின்றது. பல்லவர்காலம் பிரதான பாடுபொருளாகக் கொண்டு பக்தி நெறிக்காலமாகத்த திகழ்கின்றது.

- சங்கமருவிய கால இலக்கியங்கள் பெரும்பாலும் வெண்பா யாப்பில் பாடப்பட்டுள்ளன. பல்லவர்கால பக்திப்பாடல்கள் விருத்தப்பா யாப்பில் அதிகம் இடம்பெற்றுள்ளன.
- சங்கமருவிய காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காவியங்கள் தோற்றம்பெற்றன. பல்லவர் காலத்தில் கலம்பகம், கோவை, மடல், அம்மானை, பள்ளியெழிச்சி போன்ற பிரபந்தங்கள் தோன்றின.

**காப்பியம் என்றால் என்ன? சிலப்பதிகாரம், மணிமேகலையில் இனங்காணக் கூடிய காப்பியப் பண்புகளை விளக்குக?**

சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன சங்கமருவிய காலத்தில் எழுந்த இரட்டைக்காப்பியங்கள் ஆகும்.

**பண்புகள்**

காப்பியம் என்பது தன்னிகரில்லாத் தலைவனைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டு கடவுள்வாழ்த்து, நாட்டுநகர்ச்சிறப்பு வருணனை கூறி அறம், பொருள், இன்பம், வீடு தழுவி வருவன பெருங்காப்பியம். இவற்றுள் ஒன்றேனும் குறைவுபட்டு வருவன சிறுகாப்பியமாகும்.

. சிலப்பதிகாரம் அறம், பொருள், இன்பத்தைக்கூற மணிமேகலை அறத்தையும் வீட்டு நெறியையும் குறிப்பிடுவதால் இவை இரட்டைக்காப்பியங்களாகும்.

**அறம்**

சிலப்பதிகாரத்தில் 3 அறக்கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன.

1.அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்
3. ஊழ்வினை வந்து உறுத்தும்.

**மணிமேகலையில் அறக்கருத்து**

பசிப்பிணி அகற்றுதலை பிரதான அறமாகக்குறிப்பிடுகின்றார்.

> **"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்**
> **மறவாது இதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்**
> **உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
> **கண்டது இல்"** என்பதன் ஊடாக கூறுகின்றார்.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளமும் சுரக்கென வாழ்த்தி" என்பதனூடாக பிறர்நலம் பேணும் அறச்செயல் கூறப்படுகின்றது.
"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே......."

**பொருள் :-**

1. சிலப்பதிகாரத்தில் இரு வணிகர் குலம் பற்றிக் கூறப்படுதல்
2. கோவலன் பொருள் ஈட்டலில் ஈடுபடுதல்.

# பல்லவர்காலம்
# சோழர் காலம்
# நாயக்கர் காலம்

## 1. பல்லவர் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.

இக் காலத்தில் எழுந்த இலக்கியங்களை இருவகையாகப் பாகுபடுத்தலாம்.

1) பக்தி சார் இலக்கியங்கள்
2) பக்தி சாரா இலக்கியங்கள்

**1. பக்தி சார் இலக்கியங்களை இரு வகையாக நோக்கலாம்.**

i) **சைவ பக்தி இலக்கியம்**

| இலக்கியம் | ஆசிரியர் |
|---|---|
| தேவாரம் ( 1 - 3 ஆம் திருமுறைகள்) | திருஞானசம்பந்தர் |
| தேவாரம் ( 4 - 6 ஆம் திருமுறைகள்) | திருநாவுக்கரசர் |
| தேவாரம் ( 7 ஆம் திருமுறை) | சுந்தரர் |
| திருவாசகம், திருக்கோவையார் | மாணிக்கவாசகர் |
| திருவிசைப்பா | சேந்தனார், திருமாளிகைத்தேவர் முதலியோர் |
| திருப்பல்லாண்டு | சேந்தனார் |
| பொன்வண்ணத்தந்தாதி, திருக்கைலாய ஞானஉலா | சேரமான் பெருமான் நாயனார் |

ii) **வைணவ பக்தி இலக்கியம்**

| இலக்கியம் | ஆசிரியர் |
|---|---|
| திருப்பாவை, நாச்சியார் திருமொழி | ஆண்டாள் |
| திருமாலை, திருப்பள்ளியெழுச்சி | தொண்டரடிப் பொடியாழ்வர் |
| திருவெழுகூற்றிருக்கை திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம், பெரிய திருமொழி, சிறிய திருமடல், பெரிய திருமடல் | திருமங்கையாழ்வார் |
| திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி | பெரியாழ்வார் |
| பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் |
| திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி | நம்மாழ்வார் |
| "கண்ணினுள் சிறுதாம்பு..." எனத் தொடங்கும் பதிகம் | மதுரகவியாழ்வார் |
| நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் | திருமழிசையாழ்வார் |
| "அமலன் ஆதிபிரான்..." எனத் தொடங்கும் பதிகம் | திருப்பாணாழ்வார் |

**2. பக்தி சாரா இலக்கியங்கள்**

பக்தி சாரா இலக்கியங்களை மூன்று வகையாக நோக்கலாம்.

அ) **சிற்றிலக்கியங்க்ள்**

* நந்திக்கலம்பகம்
* முத்தொள்ளாயிரம்
* பாராத வெண்பா - பெருந்தேவனார்
* பெருங்கதை - சொங்குவேளிர் மாக்கதை, உதயணன் மாக்கதை - கொங்குவேளிர்
* பாண்டிக் கோவை

ஆ) **உரைநடை நூல்கள்**

* ஸ்ரீ புராணம்
* கஜசிந்தாமணி
* இறையனார் களவியலுரை

இ) **இலக்கண நூல்கள்**

* சங்க யாப்பு
* பாட்டியல் நூல்

**பல்லவர் கால பக்திப் பாடல்களில் காணப்படும் முக்கிய பண்புகளை இனங்கண்டு விளக்குக.**

தமிழிலக்கிய வரலாற்றில் பல்லவர் காலத்தில் பக்தியைப் பொருளாகக் கொண்டனவாகப் பெருந்தொகையான இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளமையால் இக்காலம் "பக்தி நெறிக்காலம்" எனச் சிறப்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

* சங்கமருவிய காலப் பிற்பகுதியில் காரைக்காலம்மையார் தொடக்கி வைத்த பதிக முறை பல்லவர் காலத்தில் வளர்ச்சியடையத் தொடங்குகின்றது. காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தினைப் பின்பற்றி நாயர்மார்களின் தேவாரத் திருப்பதிகங்கள்

* இறைவன் மீது கொண்ட அன்பையும் ஈடுபாட்டையும் அவன் சார்ந்த தம் உணர்ச்சி அனுபவங்களையும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இலக்கியப் படைப்புக்களினூடாக வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

* நாயன்மார்களும் ஆழ்வார்களும் சிவனதும் விஷ்ணுவினதும் திருமேனி அழகினை பக்திப்பாடல்களினூடாக வெளிப்படுத்தியுள்ளனர். சிவனது தோற்றப் பொலிவினை "குனித்த புருவமும்...." என்ற பாடலினூடாக அப்பர் முன்நிறுத்துகின்றார். இவ்வாறே "பச்சைமாமலை போல மேனி..." என விஷ்ணுவின் மேனியழகினை தொண்டரடிப்பொடியாழ்வாரும் காட்சிப்படுத்தியுள்ளமை சுட்டத்தக்கது.

* இறைவனைப் பல்வேறு உறவு நிலைகளில் வைத்து பாடுகின்ற தன்மையையும் பக்திப்பாடல்களில் காண முடிகின்றது.

எடுத்துக்காட்டு : சம்பந்தர் இறைவனைத் தந்தையாகவும் ஆண்டாள் கண்ணனைக் காதலனாகவும் கண்டு பாடல்கள் பாடியுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

* பல்லவர் கால பக்தி இலக்கியங்கள் அகத்திணை, புறத்திணை தழுவிய பாடல்களைக் கொண்டுள்ளன. உலகியலுக்குப் பயன்படுத்தப்பட்ட அகத்திணை மரபு பல்லவர் காலத்தில் இறையியலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம்.

* பக்தியை வெளிப்படுத்த அன்பினைந்திணையை விட கைக்கிளை, பெருந்திணை மரபுகள் பொருத்தப்பாடுடையனவாக அடியவர்களால் கருதப்பட்டமையால் இவை பக்தி பாடல்களில் அதிகம் விரவிக் காணப்படுகின்றன.

உ +ம் : ஆண்டாள் பாடல்கள், மாணிக்கவாசகர் பாடல்கள்

* வடமொழிப் புராண இதிகாசக் கதைச்செய்திகள் நாயன்மார்களது பாடல்களிலும் ஆழ்வார்களது பாசரங்களிலும் கையாளப்பட்டு பக்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க பண்பாகக் காணப்படுகின்றது.

எடுத்துக்காட்டு: இராவணன் செருக்கை அடக்கியமை பிரம்மா அடிமுடி தேடிய கதை (சம்பந்தர்)
கம்சனை வதைத்தமை, கண்ணனது லீலைகள் (ஆழ்வார் பாடல்)

* இசை அனைவரையும் இசைவிக்கும் தன்மையுடையதாகையால் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமது பக்திப்பாடல்களில் இசையைப் புகுத்தியுள்ளனர்.

"தமிழோடிசை பாட மறந்தறியேன்" என அப்பர் பாடியுள்ளமை இசைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

* பல்லவர் கால பக்தி இலக்கியங்களில் பாமர மக்களிடையே வழங்கி வந்த நாட்டார் இலக்கியச் செல்வாக்கினைக் கண்டுகொள்ள முடிகின்றது.

உ-ம் : திருச்சாழல், திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி

* இக் காலப் பக்திப் பாடல்களில் இயற்கை வர்ணனை அதிகளவில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எடுத்துக்காட்டு : "செப்புறு கமலங்கள் மலரும் தண்வயல் சூழ் திருப்பெருந்துறை சிவபெருமான்
- மாணிக்கவாசகர்

* பக்தி இலக்கியங்களில் விருத்தப்பா பெருமளவில் பயன்படுத்தப்பட்டாலும் வெண்பா, கட்டளைக் கலித்துறை முதலியனவும் கையாளப்பட்டுள்ளன.

* பக்தியை எடுத்துக் கூறுவதற்கு உலா, கோவை, மடல், எழு கூற்றிருக்கை, பள்ளியெழுச்சி, தாண்டகம் முதலிய புதிய பிரபந்தங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

* திட்டமிட்ட பிரசாரத் தன்மையையும் இக் காலப் பக்தி இலக்கியங்களில் காண முடிகின்றது. மக்கள் மதம் மாறாது தடுப்பதற்கு பக்தி உணர்வு அனுபவங்களைத் திட்டமிட்ட வகையில் பிரசாரம் செய்தவராக சம்பந்தர் காணப்படுகின்றார்.

* இறைவனை மட்டுமன்றி இறையடியார்களையும் போற்றிப்பாடுவன. (சுந்தரரின் திருத்தொண்டர்தொகை, மதுரகவி ஆழ்வார், நம்மாழ்வாரைப் போற்றும் பாசுரங்கள்.

* வடமொழிச் செல்வாக்கு இலக்கியங்களில் காணப்பட்டமை.

* சைவசித்தாந்த வைணவ தத்துவக் கருத்துக்கள் வெளிப்படும் தத்துவப் பொருள்பாடல்களில் வெளிப்பட்டன.

**பல்லவர் கால பக்தி சாரா இலக்கியங்களின் பண்புகளைத் தெளிவுபடுத்துக.**

* பல்லவர் கால பக்தி சாரா இலக்கியங்கள் அக, புற பொருள் மரபு கலந்து வருவனவாகக் காணப்படுகின்றன.

  எடுத்துக்காட்டு : நந்திக்கலம்பகம், முத்தொள்ளாயிரம்

* மன்னர் புகழ் பாடும் மரபு

* கலம்பகம், கோவை முதலான இலக்கிய வடிவங்கள் அறிமுகமானவை.

* மணிப்பிரவாள நடை பின்பற்றப்பட்டமை, வடமொழி சார்பு மற்றும் உரைநடை என்பன முன்னெடுக்கப்பட்டன.

* வெண்பா, விருத்தப்பாக்கள் கையாளப்பட்டமை.

* உலகியலைப்பாடியமை

* தொடர்நிலைச் செய்யுட்கள் காணப்பட்டமை.

**1. சோழர் கால இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுக.**

சோழர் கால இலக்கியங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
பேரிலக்கியங்கள்

**1) பெருங் காப்பியங்கள்**

1) சீவகசிந்தாமணி
2) வளையாபதி
3) குண்டலகேசி

**2) பேரிலக்கியங்கள்**

1) கம்பராமாயணம்
2) கந்தபுராணம்
3) பெரிய புராணம்

**3) சிறுகாப்பியங்கள்**

1) சூளாமணி
2) நீலகேசி
3) நாககுமாரண காவியம்
4) உதயணகுமார காவியம்
5) யசோதர காவியம்

**4) சிற்றிலக்கியங்க நளவெண்பா**

1) சரஸ்வதி அந்தாதி
2) சடகோபன் அந்தாதி
3) கைலைவாதி, காளத்திவாதி அந்தாதி
4) சிவபெருமான் அந்தாதி
5) திருத்தொண்டர் திருவந்தாதி

**கோவை**

1) தஞ்சைவாணன் கோவை உலா
2) மூவருலா

**பரணி**

1) கலிங்கத்துப் பரணி
2) தக்கயாக பரணி

**பிள்ளைத்தமிழ்**

1) குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்

**தூது**

1) நெஞ்சுவிடு தூது

**கலம்பகம்**

1) ஆளுடைய பிள்ளையார் கலம்பகம்

**ஏனைய நூல்கள்**

1) ஏர் எழுபது
2) சிலை எழுபது
3) திருக்கை வழக்கம்

**5) இலக்கண நூல்கள்**

1) நன்னூல்
2) வீரசோழியம்
3) நேமிநாதம்
4) நம்பியகப்பொருள்
5) யாப்பருங்கலம்
6) யாப்பருங்கலக் காரிகை
7) தண்டியலங்காரம்

**6) உரை நூல்கள்**

1) இளம்பூரணரின் தொல்காப்பிய உரை
2) கோவரையரின் தொல்காப்பிய உரை (சொல்லதிகாரம்)
3) பேராசிரியரின் தொல்காப்பியம் பொருளதிகார உரை
4) மெய்கண்டதேவரின் சிவஞானபோதம்

**7) தொகுப்பு நூல்கள்**

| | | |
|---|---|---|
| திருமுறை | - | நம்பியாண்டார்நம்பி |
| நாலாயிரத் திவ்விய பிரபந்தம் | - | நாதமுனிகள் |

**8) நாடகம்**

இராஜராஜேஸ்வரம் (கிடைக்கப் பெறவில்லை)

**2. சோழப் பெருமன்னர் கால சிற்றிலக்கியங்களின் பண்புகளைத் விளக்குக.**

i) சோழப் பெருமன்னர் கால சிற்றிலக்கியங்களின் முக்கிய பண்புகளாவன

1) சிற்றிலக்கியங்கள் அரசவைப் புலவர்களினால் இயற்றப்பட்டுள்ளன. இவை பல சிற்றிலக்கிய வடிவங்களில் அமைந்துள்ளன.

2) அரசனின் ஆட்சிச் சிறப்பு, வீரம், கொடை வெற்றித்திறன், குல மரபு முதலியவற்றை புகழ்ந்து கூறுகின்றமை.
அரசனை தன்னிகரில்லா தலைவனாக சிறப்பித்து பாடுகின்றமை.

3) இவ்விலக்கியங்களில் வடநாட்டுக் கதைகள், காவியப் பண்புகள், பல்வகை வகுத்த யாப்புக்கள் என்பன இடம்பெற்றுள்ளன.

4) இவ்விலக்கியங்கள் வடமொழிச் செல்வாக்குடன் விருத்தப்பாவினால் ஆக்கப்பட்டமை.

5) அகபுறப் பொருளை சிறப்பாக பேசுபவையாக காணப்படுகின்றன.

6) இக் கால சிற்றிலக்கியங்களில் சமயப் பொருண்மையும் காணப்படுகின்றன.

7) இவ்விலக்கியங்கள் தமிழ்நாட்டை களமாகக் கொண்டு நாட்டு நகர வர்ணனை முதலியனவும் கொண்டு படைக்கப்பட்டுள்ளன.

**3. அ) சோழப் பெருமன்னர் காலத்து பேரிலக்கியங்களைக் குறிப்பிடுக.**

**ஆ) பேரிலக்கியப் பண்புகளை துலக்குக.**

**விடை**

**அ) பேரிலக்கியங்கள்**

**1. பெருங்காப்பியங்கள்**

1) சீவகசிந்தாமணி
2) வளையாபதி
3) குண்டலகேசி

**2. இதிகாச புராணங்கள்**

1) கம்பராமாயணம்
2) கந்தபுராணம்
3) பெரியபுராணம்

**ஆ) பேரிலக்கியப் பண்புகள்**

1) இக்காலப் பேரிலக்கியங்களில் உலகியல் சார்ந்த பண்பு மேலோங்கிக் காணப்படுகிறது.
பெரியபுராணம், கம்பராமாயணம்
2) இக்கால இலக்கியங்கள் சமயம் சார்ந்த பொருண்மை கொண்டு அமைந்துள்ளன.
3) வடமொழி காவிய மரபைப் பின்பற்றி தோற்றப்பெற்றன.
4) நாட்டு நகர் வர்ணனை
5) நீண்ட கதைகளை கொண்டமைந்தமை.
6) அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளைப் பாடுகின்றமை.
7) பெரும்பிரிவு, சிறுபிரிவு என்பன காணப்படுகின்றமை.

**4. சோழர் காலத்தில் பெருமளவு காப்பியங்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணிகளை விளக்குக.**

தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப் பரப்பில் வேறு காலப் பகுதியிலும் இல்லாதவாறு பெருமளவு காப்பியங்கள் சோழர் காலப் பகுதியிலே தோற்றம் பெற்றிருந்தன. இந்தவகையில் காப்பியங்கள் இக் காலப் பகுதியில் தோற்றம் பெற்றுள்ளமைக்கான காரணிகளை நோக்குவோம்.

1) சோழப் பெருமன்னர்கள் ஆட்சி இமயம் தொடங்கி குமரிவரைக்கும் நீண்டு அமைந்து காணப்பட்டமையும் இதனால் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து கலைகள் ஓங்கி செல்வம் நிறைந்துகாணப்பட்டமையினால் இக்காலத்தில் காவியங்கள் பெருமளவு தோற்றம் பெற்றன.

2) உள்ளத் துடிப்பும் உணர்ச்சிப் பெருக்கும் வாய்க்கப்பெற்ற உத்தம புலவர்களின் தோற்றம் காப்பியங்கள் தோற்றம் பெறுவதற்கு களம் அமைத்தன.

3) அக் காலத்தில் உறுதியான் ஆட்சி நிலவியமை

4) புலவர்களை ஆதரிக்கும் புரவலர்கள் அக்காலத்தில் அதிகமாக காணப்பட்டனர்.

5) மன்னர்கள் தமிழ் மீது கொண்டிருந்த அளவு கடந்த பற்றும் காவியங்கள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தன.

6) அரசர்கள் புகழ்விரும்பிகளாக இருந்தமை.

7) சமயப் பொறை காணப்பட்டமை

8) சோழர் கால சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு சிறப்பாகக் காணப்பட்டமையால் பாடுபொருள் விரிவுபட்டு காணப்பட்டமை.

9) காப்பிய இலக்கண நூலான தண்டியலங்காரம் எழுந்தமை.

10) வடமொழிக் கல்வி விருத்தியும் காவியப் பாடசாலைகளின் தோற்றமும்.

11) பல்லவர்கால சிற்றிலக்கிய வளர்ச்சி காப்பிய தோற்றத்துக்கு வித்திட்டமை.

I. **பல்லவர் காலத்தில் பக்தியை மையமாகக் கொண்ட இலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை ஆராய்க.**

* சங்கமருவிய காலத்தில் காரைக்கால் அம்மையார் முதலால்வார் ஆகியோர் தொடக்கி வைத்த பக்தி மரபு.
* அரசியல் பொருளாதார சமூக சமய நிலை.
* நாயன்மார்கள் கையாண்ட உத்திகள்.
  (உயர்வுமுறை, தோழமைமுறை, ஆண்டாள் அடிமைமுறை)
* சங்ககால அகத்திணை மரபு கையாளப்பட்டமை
  (மானிடக் காதலுக்கு கையாளப்பட்ட தூது இறை காதலுக்காக மாறியமை)

II. **சோழர் கால இலக்கியப் பண்பை விளக்குக.**

* உலகியல் வாழ்வைச் சிறப்பித்துப் பேசுபவையாக அமைந்தமை.
* உலகியல் வாழ்வை அறம் சார்ந்து வாழ்வதன் மூலம் வீடுபேற்றை அடையலாம் என உணர்த்துபவை.
* முன்னைய காலப் பொருள் மரபுகள் இக்காலத்தில் தொடர்ந்து நிலை பெற்றமை.
* அகமும் புறமும் பல்வேறு வகைகளிலும் வளர்ச்சி பெற்று வெளிப்பட்டமை.
* மன்னர்களைத் தன்னிகரில்லாத தலைவர்களாக வியந்து பேசியமை.
* பக்தி நெறி தொடர்ந்தமை.
* உலகியலும் சமயமும் முரண்பாடின்றிப் பேசப்பட்டமை.
* பக்தி மரபின் வளர்ச்சியாக பதி, பசு,பாசம் என்ற தத்துவக் கருத்துக்கள் பரிமாற்றம் பெற்றமை.
* தத்துவக் கருத்துக்கள் அதிகளவில் வெளிப்பட்டமை. சைவ சித்தாந்தங்கள் உள்ளிட்ட தத்துவநூல்கள் தோற்றம் பெற்றமை.
* சமயச்சார்பு வெளிப்பட்டமை.
* இறையடியார்களைப் போற்றும் தன்மையுடையனவாக இருந்தமை.
* பொதுமக்களைச் சிறப்பிக்கும் தன்மை.
* நீண்ட வர்ணனைகளைக் கொண்டமை.
* செயல்லழகும் பொருளழகும் நிறைந்த அணிகள் சிறப்பாக பயன்படுத்தப்பட்டமை.
* இலக்கியங்களிற்கான வரையறைகளையும் வடிவத்தையும் தரக்கூடிய இலக்கண நூல்கள் பெருமளவில் தோன்றியமை.
* உரையாசிரியர்கள் தோன்றி தொல்காப்பியத்திற்கு அமைவாக பூரணமான காவியம் முதன்முதலில் தோன்றியமையும் அதிகளவான காவியங்கள் தோன்றியமையும்.
* ஏனைய பேரிலக்கியங்களான இதிகாசங்கள், புராணங்கள் தோன்றியமை.
* பரணி, உலா, பிள்ளைத்தமிழ் முதலிய பல வடிவங்களில் சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றமை.

* இசைத்தமிழைப் பாட கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்ட விருத்தப்பா வடிவமும் அதன் துணைப் பாவினங்களும் இக்காலத்தில் இயற்றமிழைப் பாடப் பயன்பட்டமை விருத்தப்பா பெருவழக்காயிருந்தமை.

* வெண்பா, கலிவெண்பா, கட்டளைக்கலிதுறை போன்ற வடிவங்கள் பயன்பட்டமை.

* இலக்கணக் கட்டுக்கோப்பிற்கு அமைவானவை.

* வடமொழிச் செல்வாக்கு அதிகம்

* நாட்டாரியற் பண்புகளை உள்வாங்கியமை.

III. **சோழர் காவியங்களில் பல்லவர் கால பக்தி இலக்கியங்களின் செல்வாக்கு.**

* பல்லவர் காலப் பக்தியின் தொடர்ச்சியே காவியங்களின் எழுச்சிக்கு வழிவகுத்தது எனலாம். இராமன் மீது கம்பன் கொண்ட பக்தியே கம்பராமாயண தோற்றத்திற்குக் காரணம் என்பர். அதேபோல ஞானக்காவியங்ள் எனப்படுகின்ற பெரியபுராணம், கந்தபுராணம் ஆகியவற்றின் தோற்றத்திக்கும் “பக்தியே ”காரணம்.

* பல்லவர் கால பக்தியிலக்கியங்களில் காணப்பட்ட புராண இதிகாசத்தகவல்கள் காவியங்களில் காணப்படுகின்றமை.

* பக்தி இலக்கியங்களைப் படைக்க பல்லவர் காலத்தில் பயன்பட்ட விருத்தப்பா சோழர் காலத்துக் காவியங்களிற்கு சிறந்த ஊடகமானமை.

* பல்லவர் காலத்தின் பக்தி இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட பதிக வடிவத்தின் வளர்ச்சியாகக் காவியங்கள் அமைந்தமை

* பல்லவர் காலத்தில் தோன்றிய திருத்தொண்டர் தொகை, பெரியபுராணத்தின் தோற்றத்திற்க்கு துணையாக இருந்தமை.

**நாயக்கர் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.**

**1. புராணங்கள்**

திருவிளையாடற்புராணம் - பரஞ்சோதி முனிவர்
கூர்மபுராணம், காசி காண்டம் - அதிவீரராம பாண்டியன்
சேது புராணம், திருப்பரங்கிரிப்புராணம் - நிரம்பவழகிய தேசிகர்

**2. காவியங்கள்**

வில்லி பாரதம் - வில்லிபுத்தூராழ்வார்
நைடதம் - அதிவீரராம பாண்டியன்
பிரபுலிங்கலீலை - சிவப்பிரகாச சுவாமிகள்.

**3. சிற்றிலக்கியங்கள் (பிரபந்தங்கள்)**

**பரணி**

மோகவதைப்பரணி - தத்துவராயர்
அஞ்ஞைவதைப்பரணி - தத்துவராயர்
பாசவதைப்பரணி - வைத்தியநாத தேசிகர்

**உலா**

திருவாரூருலா - அந்தகக்கவி வீரராகவ முதலியார்.
திருவானைக்காவுலா - காளமேகம்
ஏகாம்பர நாதருலா - இரட்டையர்
மதுரைச்சொக்கநாதருலா - இரட்டையர்
திருக்காளத்தி நாதருலா - இரட்டையர்

**கலம்பகம்**

காசிக்கலம்பகம் - குமரகுருபரர்
மதுரைக்கலம்பகம் - குமரகுருபரர்
தில்லைக்கலம்பகம் - இரட்டையர்
கச்சிக்கலம்பகம் - இரட்டையர்
திருவாமாத்தூர்க்கலம்பகம் - இரட்டையர்
புள்ளிருக்கும் வேளுர்க்கலம்பகம் - படிக்காசுப்புலவர்
திருவரங்கக் கலம்பகம் - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**பிள்ளைத்தமிழ்**

மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர்
முத்துக்குமாரசுவாமிப்பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர்

**நான்மணிமாலை**

நால்வர் நான்மணிமாலை - சிவப்பிரகாச சுவாமிகள்
திருவாரூர் நான்மணிமாலை - சிவப்பிரகாச சுவாமிகள்

**மும்மணிக்கோவை**

பண்டார மும்மணிக்கோவை - குமரகுருபரர்
சிதம்பர மும்மணிக்கோவை - குமரகுருபரர்
நம்பெருமாள் மும்மணிக்கோவை - திருக்குருகைப்பெருமாள் கவிராயர்

**தூது**

நெஞ்சுவிடு தூது - சிவஞான பாலைய சுவாமிகள்

**சதகம்**

தொண்டைமண்டலச்சதகம் - படிக்காசுப்புலவர்

**அந்தாதி**

நீரோட்டயமக அந்தாதி - சிவப்பிரகாச சுவாமிகள்
திருவரங்கத்தந்தாதி - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**4. தனிபாடல்கள்**

தாயுமானவர், தத்துவராயர், காளமேகம், இரட்டையர் போன்றோரது வசைக்கவி, சிலேடைக்கவி உள்ளிட்ட தனிப்பாடல்கள்

**5. சித்தர் பாடல்கள்**

பாம்பாட்டிச்சித்தர் முதலிய சித்தர்கள் பாடிய பாடல்கள்

**6. ஏனைய பாடல்கள்**

திருப்புகழ்,கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், திருவகுப்பு - அருணகிரிநாதர்
நீதிநெறி விளக்கம், சகலகலாவல்லி மாலை - குமரகுருபரர்
அட்ட பிரபந்தம் - பிள்ளைப்பெருமாள் ஐயங்கரர்.

**7. பொதுமக்கள் இலக்கியங்கள்**

முக்கூடற்பள்ளு - அறியப்படவில்லை
திருக்குற்றாலக்குறவஞ்சி - திரிகூடராசப்பக் கவிராயர்
நொண்டி நாடகம் - அறியப்படவில்லை

**8. இலக்கண நூல்கள்**

மாறனகப் பொருள் - திருக்குருகைப் பெருமாள்
மாறனலங்காரம் - கவிராயர்
சிதம்பரப்பட்டியல் - பரஞ்சோதி முனிவர்
இலக்கண விளக்கம் - வைத்தியநாத தேசிகர்

**உரை நூல்கள்**

தொல்காப்பிய உரை
பத்துப்பாட்டு நூல்களிற்கான உரை
கலித்தொகை உரை நச்சினார்க்கினியர்.
குறுந்தொகையில் இருபது பாடலுக்கான உரை
சீவகசிந்தாமணிஉரை

சிலப்பதிகார உரை - அடியார்க்கு நல்லார்
திருக்குறள் உரை - பரிமேலழகர்
திருவாய் மொழியுரை - திருக்குருவைப் பிரான் பிள்ளான்

திருப்பள்ளி எழிச்சி உரை
திருவாய் மொழி
திருவிருத்த உரை நஞ்சீயர்
திருமொழி உரை

நாலாயிரந்திவ்விய பிரபந்த உரை - பெரியவாச்சாள் பிள்ளை

திருப்பாவை உரை
கமலன் ஆதிபிரான் உரை அழகிய மணவாளர்
கண்ணிநுண் சிறுதாம்பு உரை

கடவுள் நிர்ணயம்
ஆத்தும கண்ணாடி தத்துவபோத சுவாமிகள்
தத்துவக் கண்ணாடி
யேசுநாதர் சரித்திரம்

**விஜய நகர நாயக்கர் காலத்தில் தோற்றம் பெற்ற தனிப்பாடல்களின் பண்புகளை எடுத்துக் காட்டுக**

1. **வசைபாடுதல்** - தமிழ் மன்னர்களையும் கடவுளரையும் புகழ்ந்து பாடப்பட்ட மரபிலிருந்து வேறுபட்டு வசைப்பாடல்கள் தோன்றின. மன்னர்கள், கடவுளர், மக்கள் என்போரை வசை பாடுவனவாக இவை அமைந்தன.
உ-ம் காரென்று பேர் படைத்தாய் .......(காளமேகம்)

**2. வெளிப்படையாக விமர்சித்தல்** - "தம்பியோ பெண்திருடி......." - தமக்குரிய மதிப்பு மற்றும் தனித்துவம் என்பன கிடைக்காத போது அச்சந்தர்பங்களில் ஏசியும் திட்டியும் பாடினர்.
உ-ம் சுருக்கவிழ்ந்த முன்குடும்பிச் சோழியா.......(காளமேகம்)
புராதனமான தமிழ்ப்புலவர்..........(இரட்டையர்)

3.**வித்துவத்தன்மை** - மன்னர்களினதோ, மக்களுடையதோ ஆதரவும், அங்கீகாரமும் கிடைக்காமையினால் தமது திறமையை நிறுவ பிறரால் புரிந்துகொள்ளவும் விளங்கிக்கொள்ளவும் முடியாத வித்துவத்தன்மையுடைய பாடல்களைப் பாடினார்
உ-ம் மரமது மரத்தில் ஏறி.... (சுந்தரக் கவிராயர்)

4. சிலேடை, மடக்கு, யமக அணிகள் - பொருள் அலங்காரம் அற்ற சொல் அலங்கார அணிகளான இவற்றைப் பயன்படுத்தி தனிப்பாடல்களை ஆக்கினர்
உ-ம் ஓடும் இருக்கும் ..........(காளமேகம்)

5. **பொருட்சிறப்பற்ற பாடல்கள்** - ஓசை நயத்தை கருத்தில் கொண்டு எவ்வித பொருளுமற்ற வரண்ட பாடல்களும் பாடப்பட்டன.
உ-ம் - தத்தி தாதுதி தாதுதி ததடதுதி

6. **எள்ளல் கிண்டல் உடைய பாடல்கள்** - பிறரைக் கேலியும் கிண்டலும் செய்யும் வகையிலான தனிப்பாடல்களையும் காண முடிகின்றது.
உ-ம் கல்லைத்தான் மண்ணைத்தான்.......(இராமச்சந்திர கவிராயர்)

7. **தத்துவத்தன்மை** - யாக்கை, பொருள் என்பவற்றின் நிலையாமையை வெளிப்படுத்தும் தத்துவப்பாடல்கள்
உ-ம் தாயுமானவர் பாடல்கள்
அப்பிலே தோய்த்திரட்டு .........(இரட்டையர்)

**சமூகத்தில் நிலவிய நெருக்கடிகளையும் அவலங்களையும் பதிவு செய்தல்.**

**நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை விளக்குக.**

**1. அரசியல் - சோழ சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்தமை, வடநாட்டவர்களான நாயக்க மன்னராட்சி தமிழ் நாட்டில் ஏற்பட்டமை. இஸ்லாமியப் படையெடுப்பு என்பன காரணமாக ஏற்பட்ட அரசியல் ஸ்திரமின்மை.**

**2. புலவர்களின் வறுமை** - முற்பட்ட காலத்தில் அரசர்களின் ஆதரவு கிடைக்கப் பெற்ற புலவர்களுக்கு நாயக்க மன்னரது ஆதரவு கிடைக்காமை நாட்டில் ஏற்பட்ட பஞ்சம்.

**3.ஆலய புனருத்தாரணமும் அதன் சிறப்பை போற்றுதலும்** -இஸ்லாமியர்கள் - இந்துசமய ஆலயங்களை இடித்தழித்தனர். வழிபாடுகளுக்கு தடை விதித்தனர். இதனால் இந்து மதத்தை பாதுகாப்பதையே நாயக்க மன்னர்கள் பிரதானமாகக் கொண்டிருந்தமையினால் சமயக் கருத்துக்களைக் கூறுகின்ற தலபுராணங்கள் தோன்றின.

4. **காவியங்களின் வீழ்ச்சி** - சோழர் காலத்தைப் போன்ற வளமான சூழலோ மத சுதந்திரமோ ஸ்திரமான அரசியலோ காணப்படாமையால் காவியங்கள் வீழ சிற்றிலக்கியங்கள் உருவாகின.

**5. புலவர்களின் வித்துவச் செருக்கும் வரண்ட கவிகளின் தோற்றமும் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கு தடையாகி சிற்றிலக்கியங்களாக வளர்ச்சியடைந்தது.**

**6. மடலாயங்களின் தோற்றமும் இலக்கிய பங்களிப்பும்**

**7.சாதாரண பொது மக்களின் வாழ்வியல் முதன்மைபடுத்தப்பட்டமை.**

(உ - ம்) குற்றாலக குறவஞ்சி, முக்கூடற்பள்ளு

## நாயக்கர் கால இலக்கியப் பண்புகளை குறிப்பிட்டு ஆராய்க.

1.சமயச் சார்புடையவை:

சோழர் காலத்தில் உலகியலும் இறையியலும் இணைந்து செல்ல நாயக்கர் காலத்தில் இந்நிலை மாறி உலகியல் வெறுக்கப்பட்டு இறையியலை வலியுறுத்தும் ஏராளமான பக்தி இலக்கியங்கள் தோன்றின. மட ஆதினங்களும் சமயத்தில் வளர்க்கும் பணியில் ஈடுபட்டன. சமயக் கருத்துக்களுடன் சமயத்தில் ஒரு பகுதியாகிய தத்துவக் கருத்துகளையும் மக்களிடத்தில் கொண்டு சென்றதில் மடலாயங்கள், ஆதீனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. குமரகுருபரர் தர்மபுர ஆதினத்தில் தங்கியிருந்து சமயப்பணியுடன் தமிழ்ப்பணியும் புரிந்தார்.

நமசிவாய தேசிகர், தட்சணமூர்த்தி, அம்பலவாணதேசிகர், சிவஞானமுனிவர், சங்கரநமசிவாய தேசகர் முதலானோர் திருவாடுதுறை ஆதினத்தில் தங்கியிருந்து தமிழ் பணி புரிந்தனர். பேராசிரியர் கா.சிவத்தம்பி இக்காலத்தை இரண்டாம் பக்தி இலக்கிய காலம் என்பார்.

2. பழமை போற்றும் பண்பு:

சோழர் கால இலக்கியங்கள் புதுப்புது திசையில் செல்ல நாயக்கர் காலத்தில் தமிழிலக்கியம் ஓடிய தடத்திலேயே ஓடியது அரசியல் ஸ்திரதன்மையற்று காணப்பட்டமையால் பழமை போற்றும் பண்பு காணப்பட்டது.

## நாயக்கர் கால இலக்கியப் பண்புகள்

1. தல புராணங்கள் → ஆலயங்களின் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றை முறையாக எடுத்தியம்பும் நூல்கள் தோன்றின. இதனால் தலபுராண காலம் எனவும் கூறப்படுகிறது.

உ-ம் : சேதுபுராணம், சிதம்பர புராணம், திருவாரூர்ப் புராணம்

2. வித்துவத் தன்மை → கல்வியறிவு, புத்தி சாதுரியம், கற்பனாசக்தி என்பவற்றின் துணைகொண்டுபொருளறியக் கூடிய பாடல்களைப் பாடியமை. எளிதில் அனைவராலும் பொருள் காண முடியாத தன்மை.

உ-ம் : மரமது மரத்திலேறி.....

3. சொல்லணிகளின் பயன்பாடு → யமகம், மடக்கு, திரிவு, சிலேடை முதலான சொல்லணிகளைப் பயன்படுத்தினர்.

உ-ம் : சிலேடை → நிலவாய் விளங்குவால் ... (காளமேகம்)

4. பாடுபொருளை முக்கியத்துவப்படுத்தாது பாடும் திறனை வெளிக்காட்டுதல் → இங்கு புலவனது கல்வியறிவையும் புத்திசாதூரியத்தையுமே மெச்ச முடிகிறது.

உ-ம் : மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் எல்லையற்ற கற்பனையை இப்பாடலில் காணலாம். (ஓடும் படலை முகிற்படலம்...)

பழைய இலக்கிய, இலக்கண நூல்களுக்கு உரை எழுதல்.
நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதினார். பத்துபாட்டு பாட்டு நூல்களுக்கும் உரை எழுதினார், குறுந்தொகையில் இருபது பாடலுக்கும் சீவக சிந்தாமணிக்கும் உரை எழுதினார். அடியாருக்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கும் பரிமேழகர் திருக்குறளுக்கும் உரை எழுதியமை.

♦ வடமொழிச் செல்வாக்கு அதிகம் காணப்பட்டது.

♦ அதீத கற்பனை, சொல் அலங்காரம், சொல்லடுக்கு, சந்தச்சிறப்பு காணப்படல்.

♦ உயிர்த்துடிப்பும் உணர்ச்சியாழமும் அற்ற பாடல்கள் உணர்வுகளை முக்கியப்படுத்தாது சித்திரத்தில் அடக்கிப் பாடும் சித்திர 'கவிகள் காமச்சுவையுடைய மதுரகவிகள் அளவுக்குள் அடங்காமல் பாடும் வித்தார கவிகள் என்பன பாடப்பட்டமை.

♦ பொது மக்கட் சார்பு → இக்காலத்தின் பிற்பகுதியில் சாதாரண மக்களின் வாழ்வு முறை பிரச்சினைகள் என்பவற்றைப் பாடுபொருளாகக் கொண்ட பண்பு காணப்படுதல்.

உ-ம் : குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, நொண்டி நாடகம்

♦ தத்துவ சார்பு → மத ரீதியான கருத்துக்கள் தர்க்க ரீதியாக மட்டுமன்றி கதைகள் ஊடாகவும் விளக்கப்பட்டமை.

உ-ம்: பிரபுலிங்கலீலை (சிவப்பிரகாச சுவாமிகள்)

♦ சிற்றிலக்கியப் பண்பு → உலா, கோவை, கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ் முதலிய சிற்றிலக்கியங்கள் பெருமளவில் தோன்றின. (காவிய வளர்ச்சி தடைப்பட்டமையும் பொருளாதார வீழ்ச்சியும் காரணமாக)

♦ வசைக்கவி! சோழர் காலத்தில் வாழ்த்துக்கவியாக இருந்த தமிழ்கவி நாயக்கர் காலத்தில் வசைகவியாக மாறுகிறது. காளமேகப்புலவர், இரட்டையர்கள் வசைபாடுவதில் வல்லவர்களாக காணப்படடனர்.

உ-ம் : காளமேகப்புலவரின்
சுருக்கவீழ்ந்த முன்குடுமிச் சோழியா
சோற்றுப் பொருட் குலர்ந்த வாயா
இரட்டையரின் "குன்றும் குழியும் குறுகி வழிநடந்து"

♦ வாழ்க்கை நிலையாமை வறுமையை வலியுறுத்தி பாடல்களை பாடப்பட்டமை.

உ-ம் : இராமச்சந்திர கவிநாயரின் கல்லைத்தான், மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் பறிபித்தானா.

**செய்யுள் மரபு:**

• நாயக்கர் காலத்தில் சோழர் காலத்தில் வழக்கில் இருந்த விருத்தப்பா தொடர்ந்தும் வழக்கில் இருந்தது. காளமேகப்புலவரின் சிலேடைக்கவிகள் பெரும்பாலானவை வெண்பா யாப்பிலேயே பாடப்பட்டது. மடக்கு, யமகம், திரிபு முதலான அணிகளும் இக்காலப் பகுதியில் கையாளப்பட்டன.

**நாயக்கர் காலப்பகுதியில் தோன்றிய பொதுமக்கள் சார்பான இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றில் காணப்படும் இலக்கியப் பண்புகளை விளக்குக.**

**நாயக்கர் காலத்தில் தோன்றிய பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள்.**

| | | |
|---|---|---|
| பள்ளு | : | முக்கூடற்பள்ளு |
| குறவஞ்சி | : | திருக்குற்றாலக் குறவஞ்சி |
| நொணடி நாடகம் | : | திருச்செந்தூர் நொண்டி நாடகம், சீதக்காதி நொண்டி நாடகம். |
| இராமநாடக கீர்த்தனை | | |
| சித்ர் பாடல்கள் | | |

இலக்கிய பண்புகள்

- சாதாரண பொதுமகன் ஒருவனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டமை.

- மக்களின் வாழ்க்கைமுறை பாடப்படல்.
  முக்கூடற்பள்ளு - பள்ளரை கதை மாந்தர்களாகக் கொண்டு பாடப்பட்டமை.

- சாதிய எதிர்ப்பு
  சித்தர் பாடல்களில் சாதிய எதிர்ப்பு முதன்மை பெற்றது. குறிப்பாக சிவவாக்கியரின் பாடல்களில் சாதிய எதிர்ப்பு அதிகம் காணப்படல்.
  (உ-ம்) :பறைச்சியாவதேதடா பனந்தியாவதேதடா
  இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கம் இட்டு இருக்குதோ

- சமயத்தை ஜனரஞ்சப்படுத்தல்
  1) சிலைவணக்க எதிர்ப்பு:
  "நட்ட கல்லை தெய்வமென்று நாலுபுட்பம்சாத்தியே
  சுற்றி வந்து முணுமுத்து என்று சொல்லு மந்திரம் எதடா"
  "கோயிலாவது எதடா, குளங்களாவது எதடா"

- நாடக பாங்கு - குற்றாலக் குறவஞ்சி நாடகப் பாங்கில் எழுதப்பட்டமை

- இசைபாங்கு - உ-ம் : இராம நாடக கீர்த்தனை

- நகைச்சுவை, காமச்சுவை: பிரபுலிங்கலீலை காமச்சுவை நிரம்ப பாடப்பட்டமை.

- பிரச்சினைக்கு முகம் கொடுத்த மக்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையும் கொடுத்தல்.

- நல்லுபதேசங்களை வெளிப்படுத்தல்
  கஞ்சா புகை பிடியாதே - வெறி
  காட்டி மயங்கியே கள் குடியாதே.
  (கடுவெளிச்சித்தர் பாடல்)

## 20 ஆம் நூற்றாண்டில் இலக்கிய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பு

- ஊடகங்கள் என்றும் போது ஆரம்பகால தொடர்பாடல் சாதகமான பத்திரிகை தொடக்கம் இன்றைய இலத்திரனியல் ஊடகம் வரை தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெருமளவு செல்வாக்கு செலுத்துகின்றன.

- ஊடகங்களின் பங்களிப்பு

**1) செய்தியை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு கொண்டு செல்வது.**

i) அச்சியல் ஊடகம் - பத்திரிகை, சஞ்சிகை
ii) மின்னியல் ஊடகம் - தொலைக்காட்சி, வானொலி, இணையவலை

**2) பத்திரிகைகள் சஞ்சிகை ஆரம்பத்திலிருந்தே தமிழ்ப்பணி பொதுமக்களுக்கு விளங்கும் எளிமையான அறிவிப்பு**

மணிக்கொடி - சிறுகதை வளர்ச்சி
வானம்பாடி, த, சடதபற - புதுக்கவிதை வளர்ச்சி
ஈழகேசரி மறுமலர்ச்சி - ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சி
தமிழ்மொழியில் உரைநடை எழுச்சி பெற தொடங்கியமை வாசகர் குழாம் ஒன்று உருவாகியமை
- வாசிப்புப் பழக்கம் இலக்கிய இலக்கண விடயங்கள் பொதுமக்களை நோக்கிச் சென்றமை

உ+ம்: ஐயவினாக்கள்
உலக விடயங்களைச் சாதாரண மக்களும் அறியும் வாய்ப்பை ஏற்படுத்தியமை.
கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் பயிற்சியை ஏற்படுத்தியமை.

**3) வானொலி, தொலைக்காட்சி**

* பண்டைய நவீன இலக்கியங்கள், கோட்பாடுகள் பற்றிய உரைகள், பேட்டிகள்
* புதிய இலக்கிய வெளியீட்டு முயற்சிகள் பற்றிய செய்திகள் - எழுத்தாளர் பற்றிய தத்துவங்கள்

**4) இணையம்**

இணைய நூலகங்களில் பெருந்தொகையான பண்டைய நவீன இலக்கியங்கள் பதிவேற்றப்பட்டிருத்தல். இணையத்திற்கென்றே சஞ்சிகை வடிவமைப்பு

**5) ஊடகங்களின் செல்வாக்கினால் இலக்கியங்களை வாசிக்கவும் எழுதவும் நேரமற்ற நிலை**

# ஐரோப்பியர் காலம்

## ஐரோப்பியர் காலம்

**1. ஐரோப்பியர் காலத்தில் தமிழ் உரை நடை வளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்த விடயங்களை விளக்குக.**

* ஐரோப்பியர் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளை உள்ளடக்கியவை.
* அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம் போன்ற துறைகளில் இக்காலப் பகுதியில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன.
* இத்தகைய மாற்றங்களே உரைநடை வளர்ச்சிக்கு உந்து சக்தியாகின.

1) புதிய அரசியல் பொருளாதார அமைப்பின் நிர்வாகத் தேவை, நிலமானியச் சிதைவு, கைத்தொழிற் புரட்சி, புதிய மத்தியதர வர்க்கம் உருவாக்கம் போன்றன தோற்றம் பெற அவற்றிற்கு ஏற்ப இலக்கியம் மாற்றமடைய தமிழ் உரைநடை புதிய போக்கில் சென்றது.

2) மதப் பிரசாரமும் எதிர்ப்பிரசாரமும்
(திருச்சபை பேதகம், பேதகம் மறுத்தல்)

* மதப்பிரசாரம் செய்வதற்காக வந்த மிஷனரிமாரும், பாதிரிமார்களும் சாதாரண மக்களோடு ஊடாடுவதற்கு மொழியை ஊடகமாக்கினர். இந்த மொழி இலகுத்தன்மை பொருந்தியதாக இருந்தால்த்தான் கருத்தை புலப்படுத்த முடியும் என்பதால் புதிய உரைநடை தோற்றம் பெற்றது.

* புதிதாக அறிமுகமான மதங்கள் மக்களிடையே செல்வாக்குச் செலுத்துவதைக் கண்ட மதப்பற்றாளர் (அதீத பக்தியாளர்) கண்டன நூல்களை வெளியிட்டனர்.இக் கண்டன நூல் களம் உரைநடையிலேயே அமைந்ததால் இலகுபடுத்தப்பட்ட ஒரு உரைநடையின் தேவை அங்கு உணரப்படடது.

3) அச்சு இயந்திரங்களின் வருகை.

* அரசு இயந்திரம் 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்திற்கு அறிமுகமான போதிலும் 19ஆம் நூற்றாண்டில் சுதேசிகள் அச்சகங்கள் அமைக்கலாம் என இந்திய அரசு கொண்டு வந்த சட்டம் அச்சு இயந்திரங்கள் பல்கிப் பெருகவும் உரைநடை நூல்கள் பெருக்கம் அடையவும் உந்து சக்தியாயிற்று.

4) பத்திரிகைகளின் தோற்றம்.

* அச்சு இயந்திர வருகையோடு அறிமுகமான பத்திரிகைத்துறை ஒரு வழித்தொடர்பாடல் சாதனம், இது பல்வேறு மட்டங்களைக் கொண்ட வாசகர்களின் அறிவுப்பசிக்குத் தீனிபோடுவதால் பன்முக உரைநடை வளச்சியை இத்துறையில் காண முடிகின்றது.
உ- ம் : சுவிஷேஷ பிரபல விளக்கம், நற்போதகம், பாலிய நேசன், சுதேசிமித்திரன்

5) கல்வி வளர்ச்சி

* ஆங்கிலயர் அறிமுகப்படுத்திய பாடசாலை முறைமையை சுதேசிகளும் பின்பற்றி ஊர்தோறும் கல்விநிலையங்கள் அமைத்து பலரும் கற்கும் வாய்ப்பு ஏறபட்டதால் மேலைத்தேய

நவீனங்களைப் பின்பற்றி தமிழிலும் படைக்க வேண்டிய தேவை ஏற்பட்டமையால் உரைநடை வளர்ச்சி புதிய போக்கில் வளர தலைப்பட்டது.

6) சென்னையில் அமைக்கப்பட் கல்விச் சங்கங்கள்

* ஆங்கில அதிகாரிகளையும், தமிழ் அதிகாரிகளையும் அங்கத்தவர்களாகக் கொண்ட இக் கல்விச் சங்கத்தில் தாண்டவராய முதலியார், வீராசாமிச்செட்டியார் போன்ற கல்விமான்கள் அங்கத்தவர்களாக இருந்து வேற்றுமொழிகளிலுள்ளது போன்ற புதிய இலக்கிய முயற்சிகளை தமிழிலில் கொணர்ந்தனர்.இவற்றிற்கு புதிய உரைநடையின் தேவை இன்றியமையாது வேண்டப்பட்டது.
உ+ம்: தாண்டவராய முதலிலார் - பஞ்ச தந்திரக் கதைகள்

2. **ஐரோப்பியர் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.**

அ) உரைநடையில் அமைந்தவை

**18 ஆம் நூற்றாண்டுக்குரியவை**

* வேத விளக்கம்
* வேதியரொழுக்கம்

**கண்டன நூல்**

* பேதகம் மறுத்தல்
* லூத்தர் இனத்தியல்பு
* சித்தாந்த மரபு கண்டனம்
* ஞானக் கண்ணாடி
  (கிறிஸ்தவ மதச் சார்புடையவை)

**சிறுகதை**

* வாமன்கதை, கதாமஞ்சரி, விநோதரச மஞ்சரி
* பரமார்த்த குருகதை (தமிழின் முதல் அங்கத இலக்கியம்)

**அகராதி**

* சதுரகராதி (தமிழின் முதல் அகராதி)

**இலக்கண நூல்**

* தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்)
* தொல்காப்பியச் சூத்திரவிருத்தி
  (இலக்கண ஆராய்ச்சி)
* இலக்கண விளக்கச் சூறாவளி

**உரைநூல்**

* திராவிட மாபாடியம்
  (சிவஞான போதப்பேருரை)

உரைநடையில் அமைந்தவை

**19 ஆம் நூற்றிண்டுக்குரியவை**
**மொழிபெயர்ப்பு**

* பஞ்சதந்திரக் கதைகள் (மொழிபெயர்ப்பு)
* சீவகாருண்ய ஒழுக்கம்

**நாவல்கள்**

* பிரதாப முதலியார் சரித்திரம் (தமிழின் முதல் நாவல்)
* சுகுணசுந்தரி (நாவல்)
* கமலாம்பாள் சரித்திரம் (நாவல்)
* மதிவாணன் (நாவல்)
* மோகனாங்கி (நாவல்)
* அசன்பே சரித்திரம்
* பத்மாவதி சரித்திரம்
* தீனதயாளு (நாவல்)

**கண்டனம்**

* சுப்பிரபோதம் (கண்டனம்)
* வச்சிர தண்டம் (கண்டனம்)

**உரைநூல்கள்**

* திருவிளையாடற் புராண வசனம்
* பெரிய புராண வசனம்
* பெரிய புராண உரை
* கோயிற் புராண உரை

**பாடநூல்கள்**

* இலக்கணச் சுருக்கம்
* பால பாடங்கள்

**இலக்கிய வரலாற்று நூல்**

* திராவிடப் பிரகாசிகை

ஆ) செய்யுள் வடிவானவை

**18 ஆம் நூற்றாண்டுக்குரியவை**
**இந்து சமயஞ் சார்ந்தவை**

| | | |
|---|---|---|
| * அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் | - | பிள்ளைத்தமிழ் |
| * காஞ்சிபுராணம் | | |
| * திருவானைக்காப் புராணம் | } | புராணம் |
| * திருத்தணிகைப் புராணம் | } | |
| * அறப்பளீசுவரச் சதகம் | - | சதகம் |
| * வண்டுவிடு தூது | - | தூது |
| * பறாளை விநாயகர் பள்ளு | - | பள்ளு |
| * கல்வளை அந்தாதி | } | |
| * மறைசை அந்தாதி | } | அந்தாதி |

**கிறிஸ்தவ சமயஞ் சார்ந்தவை**

| | | |
|---|---|---|
| * கித்தேரியம்மாள் அம்மானை | - | அம்மானை |
| * திருக்காவலூர் கலம்பகம் | - | கலம்பகம் |
| * அடைக்கல நாயகி வெண்பா | - | வெண்பா |
| * அன்னையழுங்கல் அந்தாதி | - | அந்தாதி |
| * தேம்பாவணி (காவியம்) | - | காவியம் |

**இஸ்லாமிய சமயஞ் சார்ந்தவை**

| | | |
|---|---|---|
| * சீறாப்புராணம் | - | காவியம் |
| * முதுமொழி மாலை | } | மாலை |
| * பெண் புத்தி மாலை | } | |
| * மிதுறு சாதா | | |
| * இபுனி ஆண்டார் படைப்போர் | | |

3. **19 ஆம் நூற்றாண்டுக்குரியவை**
**இந்து சமயஞ் சார்ந்தவை**

| | | |
|---|---|---|
| * குசேலோ பாக்கியானம் | | |
| * திருக்குடந்தைப் புராணம் | - | புராணம் |
| * சேக்கிழார் பிள்ளைத்தமிழ் | - | பிள்ளைத்தமிழ் |
| * வாட்போக்கிக் கலம்பகம் | - | கலம்பகம் |
| * திருவருட்பா | | |
| * திருவேரகயமக அந்தாதி | - | அந்தாதி |
| * வல்லிபுரநாதர் பதிகம் | - | பதிகம் |

**கிறிஸ்தவ சமயஞ் சார்ந்தவை**

* இரட்சணிய யாத்திரிகம்
* இரட்சணிய மனோகரம்
* இரட்சணிய சமயநிர்ணயம்
* ஞானக்கும்பி
* பெத்லகேம் குறவஞ்சி - குறவஞ்சி
* ஞான ஏற்றப்பாட்டு
* திருவாக்குப் புராணம் - புராணம்

**இஸ்லாமிய சமயஞ் சார்ந்தவை**

* மஸ்தான் பாடல்கள்
* நாகையந்தாதி, திருமணிமாலை
* இராஜதாயகம்
* தீன் விளக்கம்

**இ) நாடகங்கள்**

* நந்தனார் சரித்திரக் கீர்த்தனை
* நீலகண்ட நாயனார் கீர்த்தனை
* சகுந்தலா விலாசம்
* தாருகா விலாசம்
* இரணிய வாசகப்பா
* ரூபாவதி
* கலாவதி
* மானவிஜயம்
* மனோன்மணியம்

**ஈ) இலக்கணங்கள்**

* யாப்பிலக்கணம் - வினாவிடை
* அணியிலக்கணம் - வினாவிடை
* இலக்கணச் சுருக்கம்
* இலக்கண வினா - விடை
* நன்னூல் உரை
* நாடகவியல் (நாடக இலக்கணநூல்)
* திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்

**3. ஐரோப்பிய கால கிறிஸ்தவர்களின் தமிழ்ப் பணியை மதிப்படுக.**

மேலைத்தேசத்தவர்கள் கீழைத்தேசத்திற்காக நாடுகாண் பயணங்களை பல்வேறு தேவைக்காக மேற்கொண்டனர்.

* வியாபாரம், ஆட்சியமைப்பு, மதம்பரப்பில் போன்ற தேவைகளுக்காக வருகை தந்தவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தமிழை கற்றுணர்ந்து தமிழ்ப்பணியாற்ற முற்பட்டனர். அவர்களில்

1) றொபேட் நொபிலி
2) வீரமாமுனிவர்
3) கால்டுவெல்
4) ஜீ.யூ.போப் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

* இவர்களின் தமிழ்ப்பணியும், இலக்கியப்பணி, அகராதிப்பணி, காப்பியப்பணி, சிற்றிலக்கியப்பணி, உரைநடைப்பணி எனப் பன்முகப்பட்டனவாக அமைந்தன.

**1) றொபேட் நொபிலி – (1577 – 1656) 17 ஆம் நூற்றாண்டு**

இத்தாலி நாட்டவர், கத்தோலிக்க மதம் பரப்புவதற்காக தமிழகம் வந்தவர். தமிழ்மொழி, வடமொழி கற்றுத்தேறி தத்துவ போதகசுவாமிகள் என சிறப்பிக்கப்பட்டு அந்தணர் போன்று சைவஉணவு, உடை, பூனூல் பூண்டு வாழ்ந்தவர். இவரது இலக்கியப்பணிகளாக ஆத்தும நிர்ணயம், கடவுள் நிர்ணயம், தத்துவக் கண்ணாடி, யேசுநாதர் சரித்திரம் போன்ற இலக்கியங்களைத் தந்தவர். அகராதிப்பணி - தமிழ்போத்துக்கீச அகராதி, வடமொழி கலந்த தமிழ் அகராதி போன்றவற்றை படைத்தவர்.

**2) வீரமாமுனிவர் – (1680 – 1741) 18 ஆம் நூற்றாண்டு**

இத்தாலி நாட்டவர் → கத்தோலிக்கமதம் பரப்புவதற்காக தமிழகம் வந்தவர். இவரின் இயற்பெயர் → கொன்ஸ் டான்டியல் யோசப்பெஸ்கி. இவர் தைரியநாதர் என்றும் சிறப்பிக்கப்படுகின்றார். இவர் பன்மொழி வித்தகர். இவர் தமிழுக்கு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா. இவரது இலக்கியப் பணிகள் :

* காப்பியப்பணி
* சிற்றிலக்கியப்பணி
* உரைநடைப்பணி

எனப் பன்முகப்படும்.

**அ) காப்பியப்பணி:-**

யேசுவின் வளர்ப்புத்தந்தை சூசைமாமுனிவரை காப்பியத் தலைவராகக் கொண்டு "தேம்பாவணி" என்றும் காவியம் தந்தார்.

**ஆ) சிற்றிலக்கியப்பணி:-**

திருக்காவலூர்க் கலிம்பகம், சித்தேரியம்மாள் அம்மானை, அடைக்கலநாயகி வெண்கலிப்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கருணகரப்பதிகம் முதலான சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார்.

**இ) உரைநடைப்பணி:-**

பேதகம் மறுத்தல், ஞானக்கண்ணாடி, வாமன்கதை சமயக்கோட்பாடுகளை விளக்கும் நூலான வேதவிளக்கம், அங்கதம் நிரம்பிய நூலான முத்தர் இனத்தியல்பு, திருமறைத்தொண்டர் ஒழுகலாறுகளைக் கூறும் வேதியர் ஒழுக்கம் போன்ற உரைநடை நூல்கள எழுதியுள்ளார். இவர் உரைநடை முன்னோடி எனப் போற்றப்படுகிறார்.

**ஈ) இலக்கணப்பணி:-**

செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம்

**உ) ஒப்பிலணக்கணப்பதி:-**

பேச்சுத்தமிழ் வழுக்காற்றைப் பற்றிச் செய்யப்பட்டது- கொடுஞ்தமிழ் இலக்கணம். வீரமாமுனிவர் இந்நூலை இலத்தீன், ஆங்கிலம் - மொழிபெயர்த்தார்.

**ஊ) மொழிபெயர்ப்புப்பணி:-**

திருக்குறள் → அறத்துப்பால், பொருட்பால் - இலத்தீன் மொழிபெயர்ப்பாக்கம்
பரமார்த்த குருகதை → ஆங்கிலம், இலத்தீனில் மொழிபெயர்ப்பாக்கம்

**எ) அகராதிப்பணி:-**

சதுரகராதி - (சதுரம் நான்கு → (பெயர், பொருள், தொகை, தொடை)

**ஏ) தொகுப்புப்பணி:-**

தமிழில் உள்ள நீதிநூல்களை எல்லாம் தொகுத்து - தமிழ்ச்செய்யுள் தொகை என்ற நூல்

**ஐ) எழுத்துச்சீரமைப்புப்பணி:-**

எ, ஒ ஆகிய எழுத்துக்களிற்கு புள்ளி இட்டு எழுதினால் குற்றெழுத்து எனவும் இதே எழுத்திற்கு புள்ளி இடாது விட்டால் நெட்டெழுத்து எனவும் அழைக்கப்பட்டது. இவ்வாறு பல எழுத்துக் குழப்பங்களை சீரமைத்தவர்.

**3) கால்டுவெல் – (1814 – 1891)**

இவர் அயர்லாந்து நாட்டைச்சேர்ந்தவர். 23ஆவது வயதில் சமயப்பணி புரியத் தமிழகம் வந்தார்.

**அ) உரைநடைப்பணி:-**

நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம், ஞானஸ்தானம் ஆகிய நூல்களை எழுதினார்.

**ஆ) ஒப்பிலணக்கணப்பதி:-**

பன்மொழிகளைக் கற்றறிந்தார். தனது பன்மொழி ஞானத்தின் அடிப்படையில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் உருவாக்கினார்.

**இ) அகழ்வாராய்ச்சிப்பணி:-**

பாண்டி நாட்டின் துறைமுகங்களை கொற்கை, காயல் தூத்துக்குடி துறைமுகங்கள் பற்றிய சான்றுகளை பல அகழ்வுப்பணியின் வாயிலாகக் கண்டறிந்து அறிவித்தார்

ஈ) **இந்தியப்பணி:-**

23 ஆவது வயதில் இந்தியா வந்து 77 ஆவது வயதில் இந்தியாவிலே கொடைக்கானலில் உயிர்நீத்தார். "நான் இந்தியாவிலேயே உயிர்துறப்பேன்" என்ற கூற்று அவரின் பணியை பறைசாற்றுகின்றது.

4) **ஜி. யூ. போப்**

இவர் இங்கிலாந்து நாட்டவர். 19 ஆவது வயதில் தமிழகம் வந்தார். மகாவித்துவான் இராமானுஜ கவிராயரிடம் தமிழ் பயின்றார்.

அ) **இலக்கியப்பணி:-**

Poets of the Tamil land, The lives of Tamil saints என்னும் நூல்களை இயற்றினார்.

ஆ) **மொழிபெயர்ப்புப்பணி:-**

1. Elementary Tamil Grammar - என்னும் தலைப்பில் மூன்று பாகங்களாகத் தமிழ் இலக்கணத்தை மொழிபெயர்த்து எழுதினார்.
2. திருக்குறள், நாலடியார், புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு - மொழியாக்கம் செய்தார்.
3. மணிமேகலை, சிவஞானபோதம் - ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

இ) **தொகுப்புப்பணி:-**

தமிழ்இலக்கியச் செய்யுட்களைத்தொகுத்து தமிழ் செய்யுட் கலம்பகம் வெளியிட்டார்.

ஈ) **திறனாய்வுப்பணி:-**

Royal Asiatic Quarterly, The Indian Antiquary, Siddhantha Depika என்னும் ஆங்கில இதழ்களில் தமிழ் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் எழுதினார்.

## 4. ஐரோப்பியர் கால இலக்கியப் பண்புகள்

* புத்தாக்கம் அல்லது புது வீச்சினைக் கொண்டனவாக இலக்கியங்கள் காணப்பட்டன.

* வடமொழிச் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த தமிழிலக்கியம் மேலைத்தேய அல்லது ஆங்கில மொழிச்செல்வாக்கிற்கு உட்பட்டு அதனைப் பின்பற்றியது.

* உரைநடை எழுச்சிபெற்றமை.
  உரைநடை பெருவழக்காகியது.
  பல்வேறு வகைமைகளை உடையதாயிருத்தல்.

* மொழிச் சீரமைப்புக்கள் இடம்பெற்றன.

  உ+ம் : வீரமாமுனிவரது எழுத்துச் சீர்திருத்தம்
  நாவலர் சந்தி விகாரங்களை நீக்கி எழுதியமை.

* சமயப் பிரசார வாகனமாக இலக்கியங்கள் காணப்பட்டமை.

* ஆறுமுகநாவலர், இராமலிங்க அடிகள் போன்றோர் இந்துசமயச் சார்பானதும், வீரமாமுனிவர், கிருஸ்ணபிள்ள போன்றோர் "கிறிஸ்தவ சமயச்சார்பானதும் வண்ணக் களஞ்சியப் புலவர், மதாறுசாகிபுப்புலவர் போன்றோர் "இஸ்லாமிய" சமயச் சார்பானதுமான நூல்களை, பிரசுரங்களை வெளியிட்டனர்.

  குறிப்பாக இந்து, கிறிஸ்தவ மதச் சார்பில் பிரசாரத் தன்மையும் ஒன்றையொன்று கண்டிக்கும் தன்மையும் காணப்பட்டன.

* புதிய இலக்கிய வடிவங்களின் தோற்றம், புனைகதை, கட்டுரை போன்றன.

* இலக்கியத்துறையில புதிய ஆய்வுகளும் முயற்சிகளும் வளர்ச்சியடைந்தன. அகராதி, ஆராய்ச்சி, ஒப்பியல்,

* பதிப்புத்துறை வளர்ச்சியடைந்தது. இதனால் பழைய தமிழ்இலக்கிய, இலக்கண நூல்கள் பதிப்புப்பெற்றன.

* தமிழிலக்கியங்கள் பரவலடைந்தமை. ஆங்கிலம், இலத்தீன் போன்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன.

* நாடகங்கள் பாடல் வடிவில் இருந்த நிலைமாறி நாடகங்கள் உநைடையில் எழுதப்பட்டன.

* பத்திரிகைகளின் தோற்றம், அறிவிப்பு நடை தோற்றம்.

* ஆங்கில மருத்துவம், மொழியியல் ஆகிய துறைகளிலும் தமிழ்மொழியில் ஆய்வுகள், ஆக்கங்கள் செய்யப்பட்டன. மொழி நவீனத்துவம் அடைந்தது.

* மரபுரீதியான காப்பியம், புராணம் சிற்றிலக்கிய வடிவங்களின் வெளிப்பாடுகள் தொடர்ந்தன. இலக்கண நூல்கள் தோற்றம் பெற்றன.

# இருபதாம் நூற்றாண்டு

**நாவல் என்னும் எண்ணக்கருவை விளக்கி ஆரம்ப காலத் தமிழ் நாவல்களின் முக்கிய பண்புகளை எடுத்துக்காட்டுக.**

* நாவல் என்னும் சொல் புதுமை என்னும் பொருளைத் தருவது. "Novela" என்னும் இத்தாலிய மொழிச் சொல்லில் இருந்தே பிறந்தது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலிருந்தே இது ஆங்கில மொழியில் வழக்காட்சி பெற்றது.

மேரியன் கிராபோர்ட் (Marion Crawford) "கற்பனை மக்களின் செயல்களை வசனத்தில் விளக்கும் நெடுங்கதையே நாவல் என்பார்.

நாம் வாழும் காலத்தின் சமுதாயச் சூழ்நிலைகளைச் சரியாகவும், முழுமையாகவும் சொல்லும் சமகாலச் சரித்திரமே நாவல் என வில்லியம்ஸ் கூறுவார்.

"கவிதையாற்றலும் சரித்திர விளக்கமும் கலந்து தத்துவ அனுபவம் குழைத்து மனிதமேதை முன்னெப்போதும் கண்டிராத வகையில் மனித சிந்தனையையும், செயலையும் திறம்பட வடிப்பது நாவல்" என்பார் வேர்ஸ் ஃபோல்டு.

"வாழ்க்கையின் சிக்கல்களை அதன் உயர்வை அதன் சிறுமைகளை உலாவும் பாத்திரங்களான மனிதக் கூட்டத்தின் கவனத்தில் அவற்றின் குண விஸ்தாரத்துடன் சிருடிப்பது நாவல்" என்பார் புதுமை பித்தன்.

**ஆரம்பகால நாவல்கள் பற்றிய வரையறை**

ஐரோப்பாவில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் செர்வேண்டிஸ் (Cervantes - 1547 - 1616) எழுதிய "டான் க்விக் காட்" நாவல்தான் முதல் நாவலாகக் கருதப்படுகிறது. கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சாமுவேல் ரிச்சாட்ஸனே நாவல் இலக்கியத்தின் தந்தை ஆவார்.

1876 இல் நீதிபதி மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமே தமிழ் முதல் புதினம் ஆகும். இதனை அடுத்து பாத்திரப் படைப்புக்கு அழுத்தம் கொடுத்து எழுந்த நாவலே ராஜமையரின் "கமலாம்பாள் சரித்திரம்."

வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களை யதாத்த பூர்வமாக எடுத்துக்காட்டும் வகையில் மாதவையரின் கமலாம்பாள் சரித்திரம் தோன்றியது.

இப் பின்னணியில் ச.ம.நடேச சாஸ்திரி, பரிதிமாஜ் கலைஞர், வ.ரா, ஆரணி குப்புசாமி முதலியார், கோதைநாயகி அம்பாள், கே.எஸ்.வேங்கடரமணி முதலானோரும் நாவல்களை எழுதி வெளியிட்டனர்.

**தமிழ் நாவல்களின் முக்கிய பண்புகள்**

1. தமிழ் காவிய மரபின் செல்வாக்கு பரிதிமாற் கலைஞரின் மதிவானன்
2. அறப்போதனையை முதன்மைபடுத்தி கதை கூறல்
   (உ+ம் )

   i) நற்குணங்களின் அழகையும் அமைதியையும் தீய குணங்களின் அழகின்மையையும் குரூரத்தையும் தீட்ட வேதநாயகம்பிள்ளை பிரதாப முதலியார் சரித்திரத்தை படைத்தார்.

   ii) நேர்முகமாகக் கதை சொல்லும் தன்மை தொடக்கம், மையம், முடிவு என்பவற்றை முதன்மைப்படுத்தி நாவல்கள் இக்காலப் பகுதியில் தோன்றின.
   வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம்
   இராஜமையரின் சுகுணசுந்தரி கமலாம்பாள் சரித்திரம்
   மாதவையரின் - பத்மாவதி சரித்திரம்

   iii) இறுக்கமான செய்யுள் அமைப்புக்கு ஒப்பான மொழிநடை பரிதிமாற் கலைஞரின் மதிவாணன்.

   iv) சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் சித்திரிக்கப்படல்.

கே. எஸ்.வேங்கடரமணியின் "முருகன் ஓர் உழவன்", தேசபக்தன் கந்தன்

v) கூட்டுக் குடும்பத்தின் சிதைவு
மாதவையரின் பத்மாவதி சரித்திரம்

vi) விதவைகள் அவலம்
மாதவையரின் முத்துமீனாட்சி

vii) மர்ம நாவல்கள்

ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி அய்யங்கார், ஜே.ஆர்.ரங்கராஜி, நாரணதுரைக்கண்ணன் முதலியார் மர்மநாவல்களை எழுதினர். *ஆரணி குப்புசாமி முதலியாரின் இரத்தினபுரி இரகசியம்,*

*தபால் கொள்ளைக்காரன் மஞ்சள் அறையின் மர்மம்*
அரசியற் கொள்கைகளைச் சிறப்பித்துக் காட்டல்
வ.ரா.வின் கோதைத்தீவு, சுந்தரி

4) பெண்ணின் பெருமை பேசல்
பிரதாப முதலியார் சரித்திரம், முத்துமீனாட்சி *கோதைநாயகி அம்பாள்* கிழக்கு வெளுத்தது, புனித பவனம், தைரிய லட்சுமி உட்பட 111 நாவல்களைப் படைத்தார்.

*இரட்டை தலைப்பைக் கொண்டிருத்தல்*
ஆபத்துக்கிடமான அபலவாதம்

## இருபதாம் நூற்றாண்டு நவீன தமிழ்க் கவிதை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

இந்தியாவில் ஐரோப்பியர் வருகையையடுத்து அரசியல், பொருளாதார, சமூக அமைப்பில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் தோன்றிய கிழக்கிந்தியக் கம்பனியின் தோற்றமும் சென்னைக் கல்வியிச்சங்கத்தின் வளர்ச்சியும் தமிழ் இலக்கியத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வித்திட்டன. இதன் வாயிலாக ஏற்பட்ட ஆங்கிலக்கல்வியும் அச்சியந்திரத்தின் தோற்றமும் அதனால் தோற்றம் பெற்ற பத்திரிகையின் வளர்ச்சியும் தமிழ் இலக்கியத்தின் புதிய போக்குக்கு கால்கோலிட்டது. மற்றும் பிரம்மசமாஜம் (1828), ஆர்யசமாஜம் (1925), இராமகிருஸ்ணமிசன் (1886), இந்து இலக்கியச்சங்கம் (1820), இந்து முற்போக்கு அபிவிருத்திச் சங்கம் முதலான சமய சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் இந்தியப் பண்பாட்டை நவீனப்படுத்த உதவின. இவற்றுடன் ஒன்றிணைந்து இந்திய தேசிய இயக்கமும் அரசியல் சமூகரீதியான புரட்சிகரமான மாற்றங்களுக்கு அடித்தளமிட்டது. மேதைத்தேயச் சிந்தனை வழங்கிய அதிகார எதிர்ப்பும் விடுதலை உணர்வும் கவிதையின் போக்கில் பாரிய மாறுதல்களை உண்டு பண்ணின. இப்பின்னணியில் தோற்றம் பெற்ற தமிழகக் கவிதைகளும் உருவ உள்ளடக்கத்தில் புதிய மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளத் தலைப்பட்டன. ஐரோப்பியர் காலத்தில் எழுந்த ஆரம்ப காலக்கவிதைகளை நோக்குமிடத்து அவை பழைமையிலிருந்து விலகாத யாப்பமைவைக் கொண்டிருந்தாலும் பாடுபொருளில் புதிய விடயங்களை உள்வாங்கிக் கொண்டன.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை நவீன சிந்தனையாளர்களாக விளங்கிய பாரதி உள்ளிட்ட இலக்கிய கர்த்தாக்கள் ஆரம்பத்தில் பழமையைப் போற்றுபவர்களாகவே காணப்பட்டனர். இவர்களின் கவிதைப் புனைவாக்கம் மரபு மாறாது பழமையில் எளிமையைப் புகுத்திப் புதுமை காணுவதை நோக்காகக் கொண்டதேயன்றி நவீனத்துவ வழிநின்று புரட்சிகரமான மாறுதலுக்கூடாக ஒரு புதிய பிரக்ஞையைக் (Consciousness) காணுவதாக அமையவில்லை. ஆயினும் கோபாலகிரு'ண பாரதியாரின் "நந்தனார் சரித்திர கீர்த்தனைகள்" தமிழிலக்கியப் பரப்பில் பாடுபொருளாலும் பாடப்பட்ட முறைமையாலும் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியது திரிகூடராசப்பரால் கையாளப்பட்ட சிந்து முதலிய இசைப்பா வடிவங்கள் நவீன தமிழ்க்கவிதையில் அதீத தாக்கம் செலுத்தின.

நிலப்பிரபுத்துவ முறையிலிருந்து இந்தியச் சமூகம் வேகமாக மாற்றத்துக்கு உள்ளாகிக் கொண்டிருந்த காலகட்டத்திலே பாரம்பரிய மரபுசார் வாழ்க்கைமுறை மாற்றமடைந்தது. கிராமங்கள் நகரமயமாகும் சூழ்நிலையிலேயே மனித வாழ்வியல்சார் இயங்கியலுக்கேற்ப இலக்கியத்திற் கையாளப்பட்ட மொழியும் தன்னிறுக்கத்தைத் தளர்த்தியது. இதனால் மரபு வழிபட்ட செய்யுள்களில் இடம்பெறும் அடைமொழிகளும் அலங்கார மொழிகளும் வழக்கிழக்க, புழக்கத்திலுள்ள பேச்சுமொழியின் அவசியம் உணரப்பட்டது. இவ்வகையில் இராமலிங்க வள்ளலாரின் பாடல்கள், மயூரம் வேதநாயகம்பிள்ளையின் "சர்வசமயசமரசக் கீர்த்தனைகள்" போன்றன குறிப்பிட்டுக் கூறத்தக்கவை. ஐரோப்பியர் வருகையாலும் ஆங்கிலக்கல்வி முறையாலும் ஏற்பட்ட இம்மாற்றங்கள் உயிர்த்துடிப்புள்ள இலக்கிய ஆக்கங்களுக்கு கால்கோளாக அமைந்தன எனலாம்.

இருபதாம் நூற்றாண்டிலே பாரதியின் எழுச்சி நவீன கவிதையின் வியாபித்த எல்லைகளை நிரப்பிக் கொள்ள உதவிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை தமிழ்வழிச் சிந்தனாவுலகில் தாக்கம் செலுத்திய பழமையின்மரபு பாரதியின் ஆரம்பகாலக் கவிதைகளில் விரவிக் காணப்பட்டன. வேதங்கள், புராணங்களினை முறையாகப் பயின்றமையால் பாரதிக்கிருந்த அனுப ஞானத்தையும், வள்ளுவன், இளங்கோ, கம்பன், தாயுமானவர், பட்டினத்தடிகள், மாணிக்கவாசகர் ஆழ்வார்கள் முதலானோர் மீது கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டையும் பாரதியின் கவிவழி கண்டு உணரலாம். மரபுவழி நின்று நெகிழ்ச்சியற்ற செறிவான கவிதைகளைப் பாடிய பாரதி ஆசிரியப்பா, வெண்பா, விருத்தப்பா முதலான பாவகைகளையும் கையாண்டார். இவ்வகையில் மரபுவழி சமுதாயத்துடன் இணைந்து ஆறுதல் காணும் முயற்சியாகத் தோத்திரப்பாடல்கள், புதிய ஆத்திசூடி, கீர்த்தனைகள், பாரதமாதா திருபபள்ளியெழுச்சி, கண்ணி, இளசை ஒருபாஒருப.்.து முதலான இலக்கியங்களைத தக்க முன்னைய காலத்தின் தொடர்ச்சியாகப் படைத்தார்.

பழமையின் இறுக்கமான பிடிக்குள் சிக்குண்ட பாரதி ஆங்கிலக்கல்வி, வடநாட்டு யாத்திரை, பத்திரிகைத் தொழில், உரைநடையின் எழுச்சி, சமூக விழிப்புணர்வு என நிகழ்கால இயங்கியலுக்கூடாகப் புதுமையை நோக்கி நகர்கிறார். சான்றோருக்கு மாத்திரமின்றி சாதாரண வாசகனுக்கும் தன் கவிதை போய்ச் சேர வேண்டுமென்னும் நோக்கில் யாப்பிலிருந்து விடுபட்டு உரைநடையிலமைந்த வசன கவிதைகளையும் யாத்தார். "எளிய பதம், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு" என்பவற்றின் அடிப்படையில் நவீன வாழ்வியலுக்கேற்ப இருபதாம் நூற்றாண்டுக் கவிதையைச் சாத்தியமாக்கினான் பாரதி. "சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது, சோதிமிக்க நவகவிதை, எந்நாளும் அழியாத மகா கவிதை" என்னும் தன்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் "காட்சிகள்" என்ற தலைப்பில் வசன கவிதைகளை எழுதி நவீன கவிதைக்கு வித்திட்டான். வேத காலக்கவிதைகளைப் பின்பற்றி இயற்கையை வியந்து பாடும் இக்கவிதைகள் யாப்பைத் துறந்து வசனத்தில் கவிதை எழுத முயன்ற பரிசோதனையாகவே இற்றை வரை கருதப்பட்டு வருகிறது.

பாரதியின் காட்சிகளும் வாலட்விட்மனின் வசன கவிதைகளும் ஏற்படுத்திய பாதிப்பால் 1934 இல் புதுக்கவிதைகளை எழுதத் தொடங்கிய ந.பிச்சமூர்த்தி வடிவ ரீதியான சோதனைகளைத் தமிழ்க் கவிதையில் நிகழ்த்தினார். தமிழ் இலக்கியவுலகம் ந.பிச்சமூர்த்தியின் கவிதைகளைப் புதுக்கவிதைகளாக அங்கீகரிக்க மறுத்த சமயத்தில் சி.க.செல்லப்பாவின் "ஊதுபத்திப்புல்" என்னும் நூல் ந.பிச்சமூர்த்தியைத் தமிழ் போற்றும் புதுமைக் கவிஞனாக நிலைபெறச் செய்தது. இவரைத் தொடர்ந்து கு.ப.இராஜகோபாலன், வல்லிக்கண்ணன் முதலானோரும் வசன கவிதைகள் பலவற்றை எழுதினார்கள்.

இக்காலப் பகுதியில் வெளியான மணிக்கொடி, சூறாவளி, கலாமோகினி, கிராம ஊழியன், சரஸ்வதி, இலக்கிய வட்டம், எழுத்து, நடை, சகடதபற முதலான சஞ்சிகைகள் வசன கவிதைகளை வெளியிட்டதுடன் புதுக்கவிதை பற்றிய விவாதத்தையும் தொடக்கி வைத்தன. இதில் நவீன கவதையைச் சக்தி வாய்ந்த இலக்கிய வடிவமாக உருவாக்கிய பெருமை 1959 இல் சி.சு. செல்லப்பாவால் தொடங்கப்பட்ட "எழுத்து" என்னும் சஞ்சிகையையே சாரும். தருமு சிவராம், தி.சோ.வேணுகோபாலன், சி.மணி, பசுவய்யா, நகுலன், எஸ்.வைத்தீஸ்வரன் போன்ற சிறந்த நவீன

கவிஞர்களை எழுத்தே அறிமுகம் செய்தது.

இதனைப் போன்று நடை, கசடதபற, தாமரை போன்ற இதழ்களும் நவீன கவிதையைப் புதுப்பொலிவுடன் இயங்கச் செய்தன. நா.காமராசன், மீரா, சிற்பி, புவியரசு, மேத்தா, தமிழன்பன், அக்னி புத்திரன் எனப் புதுக்கவிஞர்கள் பலரைத் தமிழுக்கு அளித்த பெருமை "வானம்பாடி" இதழுக்கு உண்டெனினும் செறிவான வீரியம் மிக்க கவிதைகளை இவ்விதழ் பெருமளவில் பிரசுரிக்கவில்லை. இடதுசாரிச் சிந்தனையும், தமிழ் மரபறிந்து கவிதை பாடும் புதுமையும், சமுதாயப் பார்வையும் கொண்ட வானம்பாடிக் கவிஞர்களால் சொல்நேர்த்தி மிக்க சொல்லிறுக்கமான கவிதைகளைப் பேரளவில் கூட படைக்க முடியவில்லை.

தற்காலத்தில் எழுந்த தலித், பெண்ணியம். பின் நவீனத்துவ ஆய்வுகள் தமிழ் கவிதைப் போக்கில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தின. 1991 இல் இடம்பெற்ற அம்பேதகார் நூற்றாண்டு விழாவை ஒட்டி இலக்கியத்தில் தலித் தொடர்பான விடயங்கள் ஆழமாக பரிசீலிக்கப்பட்டன. இப்பின்னணியில் எழுந்த நிறப்பிரிகை சஞ்சிகையின் வரவு தலித் இலக்கியத்திற்க்கு காத்திரமான அஸ்திவாரத்தை இட்டுச் சென்றது. ராஜ் கௌதமன், அ.மார்க்ஸ், ரசிக்குமார் முதலானோர்களால் தமிழில் தலித் அரசியல், தலித் பண்பாடு, தலித் இலக்கியம் முதலான விடயங்கள் நன்கு அலசி ஆராயப்பட்டன. கவிஞர் இந்திரனின் தொகுப்பாக வந்த பிணத்தை எரித்தே வெளிச்சம், தலித் கலை அழகியலையும் தமிழ் அழிகியலாக முன்வைத்த நூல் எனலாம். இதற்கு முன்னோடியாக மராத்தியில் செயல்பட்ட தலித் இயக்கங்கள் இந்திய சாதி அமைப்பின் மீது செய்த விமர்சனத்தை விளக்கும் வகையில் தி.சு.சதாசிவத்தால் தலித் இலக்கியம் என்ற நூல் வெளிவந்தது. இந்நூலில் ஆறுகவிதைகளும் மொழிபெயர்த்துத் தரப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து ரவிக்குமார், ராஜ்குமார், விழி பா இதய வேந்தன், பாப்லோ அறிவுக்குயில், அன்பாதவன், கருத்தம்மா, ப்ரதிபா ஜெயச்சந்திரன், கே. ஏ. குணசேகரன், உஞ்சைராசன் முதலானோர் தலித் மக்களின் உணர்வுகளைக் கவிதையாகப் படைத்தனர். தமிழில் தலித் கவிதை வெளிப்பாடுகள் விவாதிக்கப்படும் அளவிற்கு நூலாக்கம் பெறவில்லை. ஆயினும் அண்மையில் வெளிவந்த ம.மதிவண்ணனின் நெரிந்து தொகுப்பு வேறு ஒரு தளத்திற்குள் நுழைந்துள்ளது.

1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பெண் கவிஞர்கள் பலர் தங்கள் சுயதன்மையுடன் கவிதைகளைப் படைக்க முன்வந்தனர். இன்று நவீன பெண்கவிஞர்களாக அறியப்பட்ட மாலதி மைத்ரி, சுகிர்தராணி, சல்மா, சுகந்தி, சுப்பிரமணியம், குட்டி ரேவதி, வெண்ணிலா, உமாமகேஸ்வரி போன்றோர்களின் கவிதைகள் ஆணாதிக்க அடக்குமுறைக்கு எதிராக எழுந்தன. ஆயினும் பெண்ணின் உணர்வுகளை இக்கவிதைகள் மென்னுணர்வுத் தளத்தில் வெளிப்படுத்தின.

1990களுக்குப் பின் எழுந்த கவிதைகள் பல குறிகளின் வழி இயங்கும் கவித்தைகளாகயன்றி சொல் இடைவெளி வாயிலாக புதிய அர்த்த தன்மையில் இயங்கும் கவிதைகளாகக் காணப்பட்டன. கவிதையானது தன் மையவோட்டத்திலிருந்து விலகி வாசகனின் மனோநிலைக்கும் அவனின் நுகர்வுக்கும் ஏற்ப மாறும் தன்மையும் கொண்டது. இத்தன்மையில் எழும் பின்நவீனத்துவக் கவிதைகள் அர்த்த தன்மை கொண்டவை. அறிவுப் புலத்தில் வைத்தே நோக்கத்தக்கவை. இக்கவிதைகளின் முன்னோடிகளாக பிரம்மராஜன், பிரேம் - ரமேஷ், யூமாவாசுகி, பாலைநிலவன், யுவன் சந்திரசேகர், குவளைக்கண்ணன், தபசி, யவனிகா ஸ்ரீராம், சங்காம சுப்பிரமணியன் முதலானோரைக் கூறலாம்.

தற்காலத்தில் நவீன வழிப்பட்ட மேனாட்டு மனநிலையல் தமிழ்க்கவிதை, உருவப்புதுமையால் உள்ளடக்க ரீதியான மாற்றங்களுக்குள்ளாகிப் புதிய பரிமாணத்தைத் அடைந்தது. உணர்வின் நிலைக்கேற்ப எண்ணத்தைப் பிரதிபலிக்கும் யாப்புடைத்த கவிதைகளான நவீன கவிதை, வசன நடையிலிருந்து மாறுபட்டு நுட்பமான சந்தங்களை உள்வாங்கி கொண்டது. அலங்காரத்தன்மையற்ற, அர்த்தம் மிகுந்த சொற்களின் கெட்டிப்படுத்தலோடு தன்னை நிலைப்படுத்திக் கொண்ட நவீன கவிதை புதிய சூழலில் காலமாறுதல்களைக் கடந்து நிலைபெறத் தொடங்கியது.

எவகிறீன் அச்சகம் 693 கே கே எஸ் வீதி. யாழ்ப்பாணம்.தொ : 021 2219893